இந்திய கம்யூனிஸ்ட் கட்சி (மார்க்சிஸ்ட்)

தமிழ் மாநில 9வது மாநாடு

அரசியல் அறிக்கை

16

(சேலம் 1971 நவம்பர் 25 முதல் 28 முடிய)

இந்திய கம்யூனிஸ்ட்டு கட்சி (மார்க்சிஸ்ட்)

தமிழ் மாநில 9-வது மாநாடு

(சேலம் 1971 நவம்பர் 25 — 28)

அரசியல் அறிக்கை

தோழர்களே,

(1) மூன்றாண்டுகளுக்குப் பிறகு இந்த மாநில மாநாட்டில் நாம் கூடுகிறோம். இம்மூன்றாண்டுகளுக்குள் உலகத்திலும், நம் நாட்டிலும் வரலாற்று முக்கியத்துவம் வாய்ந்த நிகழ்ச்சிகளும் மாற்றங்களும் ஏற்பட்டுள்ளன.

உலகப் பின்னணி

(2) சீனப்புரட்சி ஏற்பட்டபிறகு, சீனமக்கள் குடியரசை அழித்திடும் நோக்கோடு, அதை முற்றுகையிட்டு, தன் செல்வாக்கிலுள்ள நாடுகளையும், கூட்டாளி நாடுகளையும் அதோடு வியாபார உறவுகள்கூட வைத்துக்கொள்ளாமல் அதன் வளர்ச்சியைத் தடுப்பதற்காகவும், ஐ. நா வில் அதற்குப்பதிலாக சியாங்-கே-ஷேக் கோஷ்டியை சீன அரசாக அமர்த்தி மக்கள் குடியரசு உலக அரங்கில் தனக்குறித்தான பாத்திரத்தை வகிக்காமலிருக்க அமெரிக்க ஏகாதிபத்தியம் செய்த முயற்சிகள் தவிடுபொடியாக நொறுங்கிவிட்டன சீனா இவ்வளவு கஷ்டங்களையும் சமாளித்து, குடியரசு தோன்றிய காலத்தில் இந்தியாவைக் காட்டிலும் தொழில், விவசாயத் துறையில் பின் தங்கியிருந்த நிலைமையை மாற்றி, இன்று சகலத்துறைகளிலும் முன்னேறி உலக வல்லரசுகளில் ஒன்றாக வளர்ந்ததன் விளைவே இது.

(3) பொதுவாக இக்கால கட்டத்தில் சோஷியலிஸ்டு முகாமில் உள்ள நாடுகளின் வளர்ச்சி தொடர்ந்து வலுவடைந்துள்ளது.

(4) மறுபுறத்தில், ஏகாதிபத்திய நாடுகளிலும், அவைகளைச் சார்ந்துள்ள பின்தங்கிய நாடுகளிலும் பொருளாதார நெருக்கடி ஆழமாக வளர்ந்துள்ளது. இரண்டாண்டுகளுக்கு முன்பு ஏற்பட்ட டாலர் நெருக்கடியை சமாளிப்பதற்காக ஏகாதிபத்திய நாடுகள்

கூட்டாக எடுத்த நடவடிக்கை பயனற்றுப்போய் அந்த நெருக்கடி மிகவும் பயங்கரமாக 4 மாதங்களுக்கு முன் வெடித்து ஏகாதிபத்திய நாடுகளின் பொருளாதாரத்தையே குலுக்கியுள்ளது.

(5) இரண்டாவது உலக யுத்தத்தில், ஐரோப்பிய நாடுகளும், ஜப்பானும் யுத்தத்தில் மிகப்பெரிய சேதங்களை அடைந்துகொண்டிருந்த காலத்தில், அமெரிக்கா தன் நேச நாடுகளுக்கு யுத்த தளவாடங்களையும், மற்ற பொருள்களையும் விற்றதன் மூலமாகத் தன் தொழில்களையும், மற்றும் பொருளாதாரத்தையும் பிரம்மாண்டமாக வளர்த்து யுத்தம் முடிந்தபோது உலகிலேயே மிகப்பெரிய வல்லரசாக விளங்கியது, ''அமெரிக்க நூற்றுண்டு'' வந்துவிட்டது என்று அமெரிக்கா கனவு கண்டது அப்படிப்பட்ட நிலைமையில், 25 ஆண்டுகளுக்கு முன் பிரட்டன் உட்ஸ் என்ற நகரத்தில் நடந்த மாநாட்டில், சர்வதேச அயல்நாட்டு வியாபாரத்தில் அமெரிக்காவின் டாலர் சர்வதேச நாணயமாக ஏற்றுக்கொள்ளப்பட்டது. 35 டாலர்களுக்கு 1 அவுன்ன் தங்கம் என்ற மதிப்பீடும் அமெரிக்க டாலருக்கு வகுக்கப்பட்டது. அதாவது 35 டாலர்களைக் கொடுத்தால் 1 அவுன்ஸ் தங்கம் கொடுப்பதாக அமெரிக்கா ஏற்றுக்கொண்டது, இதற்காக, அது அச்சிட்டு வெளியிடும் டாலர் நோட்டுகளின் மதிப்பில் குறைந்தபட்சம் 25 சதமானம் மதிப்புள்ள தங்கத்தை கையிருப்பாக வைப்பதாக அமெரிக்கா ஏற்பாடு செய்தது.

(6) ஆனால், யுத்தத்திற்குப்பிறகு, மற்ற ஏகாதிபத்தியத்திய நாடுகளும் யுத்தச் சேதங்களைச் சமாளித்து, தொழில் வளர்ச்சி ஏற்பட்டு, அமெரிக்காவுடன் போட்டிபோடும் நிலை நாளுக்குநாள் வளர்ந்து வந்துள்ளது,

(7) அமெரிக்காவோ, உலகத்தில் கம்யூனிஸம் பரவிவிடக் கூடாது என்று தடுத்த நிறுத்துவதற்காக, உலகெங்கிலும் இராணுவ தளங்களை வைத்து, இராணுவச்செலவை நினைக்கமுடியாத அளவ அதிகரித்துக்கொண்டுடே போயிற்று சீனப்புரட்சியைத் தடுப்பதற்காக சியாங்கே ஷேக்குக்குக் கொடுத்த ஆயுதங்களும், பணமும், வட கொரியாவை அழித்துவிடுவதற்காக யுத்தத்தில் இறங்கியதிலும், பிறகு சீனவை முற்றுகையிடச் செலவழித்த பணமும், ஐரோப்பாவில் நாட்டோ இராணுவக் கூட்டுக்காக செலவழித்த பணமும், எல்லாவற்றிற்கும் மேலாக, தெற்கு வியட்னுமை தனது காலனி நாடாக வைத்துக்கொள்வதற்காக ஆரம்பத்தில் அங்கு அது ஸ்தாபித்த பொம்மை சர்க்காருக்குக் கொடுத்த இராணுவ, பண உதவியும், இதைக்கொண்டு தென் வியட்நாம் விடுதலைப்போராட்டத்தை அந்த பொம்மை சர்க்கார் சமாளிக்க முடியாத நிலை ஏற்பட்ட பிறகு, 5 லட்சம் துருப்புகளை தெற்குவியட்நாமுக்கு அனுப்பி நேரடியாக விடுதலைப் படைகளுக்கு எதிராக யுத்தத்தில் இறங்கியதின் மூலமாகவும் சிலவு செய்த பணம், இவைகளை யெல்லாம் கணக்குப்பார்த்தால் பிரமித்துப்போவோம். வியட்நாம் யுத்தத்திற்காக மட்டும் சிலவு செய்தது, சென்ற ஆண்டுவரையில் ஒன்றறை இலட்சம் கோடிரூபாய்! இவ்வளவு சிலவுசெய்தும் அதன் இலட்சியம் ஈடேற வில்லை வரலாறு காணுத உறுதியுடனும் வீரத்துடனும் போராடும் வியட்நாம் மக்க

Inter-imperialist contradictions.
- Role of mass movement in U.S. & Capitalist world
- Contradiction between developing countries & world Capitalist

5

ளின் முன் அமெரிக்க ஆயுதங்களும் படைகளும் பயனற்றுப் போய் விட்டன.

(8) இவ்வளவு சிலவு செய்வது எப்படி? அமெரிக்கா, டாலர் நோட்டுகளை ஏராளமாக அச்சடிக்கும் முறையைக் கையாண்டது. அதன் விளைவு அமெரிக்கப் பொருள்களின் விலைகள். ஏறிக்கொண்டே போயின. அதனால் டாலரின் மதிப்பு நாளுக்குநாள் வீழ்ச்சியடைந்தது. வெளிநாட்டு வியாபாரத்திலும், அமெரிக்காவின் கை பலவீனமடைந்தது. இந்நிலையில் வளர்ச்சியடைந்த மேலைநாடுகளின் பாங்கிகளில் ரிஸர்வாக வைக்கப்பட்டிருந்த டாலர்களை தங்கமாக மாற்றிக்கொள்ளும் படலம் துவங்கி வேகமாக வளர்ந்தது. அமெரிக்காவின் கையிருப்புத் தங்கம் தேய்ந்தது.

(9) நிலைமையை சமாளிக்க முடியாமல் அமெரிக்க ஜனாதிபதி நிக்சன் இனி டாலருக்குத் தங்கம் கொடுக்க முடியாது என்றும், அமெரிக்காவுக்குள் மற்ற நாடுகளிலிருந்து இறக்குமதியாகும் பொருள்களுக்கு அதன் விலையில் 10 சதம் சுங்கவரி விதித்தும், அமெரிக்காவில் தொழிலாளர்களின் சம்பளத்தை முடக்கம் செய்தும், உத்தரவு பிறப்பித்துள்ளார்.

இதன் எதிரொலி எல்லா ஏகாதிபத்திய நாடுகளிலும் கிளம்பியுள்ளது. வெளிநாட்டு வியாபாரப் போட்டி இன்று வியாபார யுத்தமாக மாறிவிட்டது.

(10) இந்த நெருக்கடி எல்லா ஏகாதிபத்திய நாடுகளையும் பாதித்தது. தொழிலுற்பத்திக் குறைந்து, வேலைநிறுத்தப் போராட்டங்களும், வளர்ந்து வருகின்றன. சீனாவை பகிஷ்கரிப்பது என்ற கொள்கை தவிடுபொடியாகி, 70 கோடி மக்களின் மார்க்கெட்டுக்காக இந்த நாடுகள் க்யூவரிசையில் நின்று, கடைசியில் இன்று அந்த க்யூவில் அமெரிக்க ஜனாதிபதி நிக்சனும் சேர்ந்து நிற்கிறார்.

(11) "அமெரிக்க நூற்றாண்டு" வந்து விட்டது என்ற கனவு நனவாகவில்லை; பகற்கனவாகிவிட்டது, உலகக் கம்யூனிஸ்டு இயக்கத்தில் பிளவு ஏற்படாமலிருந்திருந்தால், சோவியத்யூனியனின் கம்யூனிஸ்க்கட்சி திருத்தல்வாதக் கொள்கைகளைக் கடைப்பிடிக்காதிருந்தால், அதன் எதிரொலியாக சீனக் கம்யூனிஸ்டுக் கட்சி இடதுசாரி செக்டேரியன் கொள்கைகளை அனுஷ்டிக்காமலிருந்திருந்தால், சோஷலிஸ்டு முகாம் ஒன்றுபட்டு நின்றிருக்குமேயானால், இந்த வளர்ச்சி எவ்வளவு வேகமாக ஏற்பட்டிருக்கும் என்று கற்பனை செய்து கொள்வது கடினமல்ல.

(12) இந்தப்பிளவு இருந்த போதிலும் இத்தகையதோர் வளர்ச்சி ஏற்பட்டுள்ளது, சோஷியலிஸ்டு அமைப்பு முதலாளித்துவ அமைப்பை விட எவ்வளவு சிறந்தது என்பதையே எடுத்துக்காட்டுகிறது.

இந்திய நிலை

(13) இவ்வாறு முதலாளித்துவம் தனது மூப்புக்காலத்தை எய்தி, வளர்ச்சியடைந்துள்ள ஏகாதிபத்திய நாடுகளிலேயே நெருக்கடி தீவிரமாகிக் கொண்டிருக்கும் காலத்தில் அவைகளின் உதவியைக் கொண்டு இந்தியா, அந்த முதலாளித்துவப் பாதையில் வளர்ச்சியடையும் முயற்சியில் ஈடுபட்டதனால் நம் நாட்டிலும் கடந்த பல ஆண்டுகளாக நெருக்கடி முற்றி வருவது தெரிந்த விஷயம். அதன் விளைவாக 1967 தேர்தலில் காங்கிரஸ் கட்சியில் ஏகபோகம் உடைந்ததும் தெரிந்த விஷயம். மேற்குவங்கத்திலும், கேரளத்திலும் நமது கட்சியின் தலைமையில் ஏற்பட்ட மாநில அரசுகள், தொழிலாளி, விவசாயிகள் இயக்கத்தையும், மற்றுமுள்ள ஜனநாயக சக்திகளையும் ஊக்குவித்ததனால் அம்மாநிலங்களில் ஏற்பட்ட வளர்ச்சியும், அதன் முன் உதாரணத்தினால் மற்ற மாநிலங்களிலும் ஜனநாயக இயக்கம் வளர ஆரம்பித்ததையும் கண்டு வெறுண்டு இந்த வளர்ச்சிப்போக்கைத் தடுப்பதற்காக என்ன தந்திரத்தை உபயோகிப்பது என்ற கொள்கையில் காங்கிரஸ் இரண்டாகப் பிளந்தது.

(14) இந்திரா காங்கிரஸ் மக்களின் வளர்ந்து வரும் அதிருப்தியைச் சமாளிப்பதற்காக பாங்குகளை தேசியமயமாக்கி, மன்னர்களின் மான்யத்தை ரத்து செய்வதற்கான மசோதாவைக் கொண்டு வருவது முதலிய சில நடவடிக்கைகளின் மூலம் மக்களிடையே பிரமைகளைச் சிருஷ்டித்தது. இந்த சாகஸங்களுக்கு வலதுசாரி கம்யூனிஸ்டுக் கட்சி உதவியளித்தது. கேரள, மேற்குவங்க கூட்டணி அரசுகளைத் தகர்ப்பதில் இந்திரா காங்கிரஸுக்கு உதவியளித்தது.

இத்தகைய சாகஸங்களினால் இடதுசாரி சக்திகளில் பலவற்றை—பி. சோ. கட்சி, ச. சோ, கட்சியின் ஒரு பகுதி, பார்வர்ட்பிளாக், குடியரசுக்கட்சி—தன் வசப்படுத்திக்கொண்ட பிறகு, இந்திரா காந்தி பார்லிமெண்டைக் கலைத்துவிட்டு, மறு தேர்தலில் இறங்கினார். ''காங்கிரஸ் அரசு இதுவரையில் சோஷலிஸ்டு திட்டங்களை நிறைவேற்றுவதற்குத் தடையாக இருந்த மொரார்ஜிதேசாய், எஸ். கே பாடில், அதுல்யகோஷ் போன்ற பிற்போக்காளர்களைக் களைந்தெறிந்துவிட்டோம், இனி எவ்வித தடங்கலுமின்றி சோஷியலிஸ்டு கொள்கைகளை நிறைவேற்றுவோம் வறுமையை ஒழிப்போம்! வேலையில்லாத் திண்டாட்டத்தை ஒழிப்போம்!!'' என்று சகல சக்திகளையும் கொண்டு பிரச்சாரத்தை முடுக்கிவிட்டு, மக்களிடையே நம்பிக்கையை ஊட்டி, தேர்தலில், பார்லிமெண்டில் மூன்றில் இரண்டு பங்கு ஸ்தானங்கள் பெற்று, மீண்டும் காங்கிரஸின் ஏகபோக ஆட்சியை நிலைநாட்டுவதில் இந்திரா காந்தி வெற்றி கண்டார்.

15) நமது கட்சி ஒன்றுதான், இந்திரா காங்கிரஸுக்கும், சிண்டிகேட் காங்கிரஸுக்கும் அடிப்படையான கொள்கை வித்தியாசம் கிடையாது. இரண்டும் பெரு முதலாளிகள் தலைமையிலுள்ள முதலாளித்துவ—நிலப்புரபுத்துவ வர்க்கங்களைப் பாதுகாக்கும் கட்சி

வாக்கியுள்ள தேர்தல் அணிகளோடு நாம் எவ்விதத் தொடர்பும் கொள்ளமாட்டோம்; மாறாக இரண்டையும் எதிர்ப்போம் என்று உறுதியாக நின்றது.

தேர்தலுக்குப் பின்

16) தேர்தல் முடிந்து பத்து மாதங்களாகிவிட்டன. இக் காலகட்டத்தில் ஏற்பட்டுள்ள நிகழ்ச்சிப் போக்குகள் நாம் எடுத்த நிலை சரியானது என்பதை மெய்ப்பித்துள்ளன.

17) தேர்தலுக்கு முன்பிருந்ததைக் காட்டிலும் பொருளாதார நெருக்கடி தீவிரமடைந்துள்ளது. இதை இன்று நாட்டிலுள்ள பூர்ஷுவாப் பத்திரிகைகளும், தொழிலதிபர்களுமே ஏற்றுக்கொண்டுள்ளனர். திட்ட மந்திரி சி. சுப்பிரமணியமே, தொழில் வளர்ச்சி சென்ற ஆண்டு 4 சதமாக இருந்தது, இந்த ஆண்டின் 8 மாதங்களில் 1·5 சதமாகக் குறைந்துவிட்டது என்று ஒப்புக்கொண்டுள்ளார்.

18) இதற்கு முந்தி எவ்வாண்டிலும் இல்லாத அளவு 1970-இல் உணவு தானிய உற்பத்தி 108 லட்சம் டன் ஆகியுள்ளது என்று சர்க்கார் புள்ளிகள் கூறுகின்றன. இதைப் ''பசுமைப்புரட்சி'' என்று கூறி ஊர் பூராவும் டமாரம் அடிக்கின்றனர். ஆயினும் மக்கள் வாங்கும் ஒவ்வொரு பொருளின் விலையும் என்றைக்கும் இல்லாத அளவு உயர்ந்துகொண்டே வருகிறது. தமிழ் நாட்டில் சமீப காலத்தில் அரிசி படி ரு 2-30 முதல் 3-50 வரையில் விற்கிறது. எவ்வாண்டிலும் இந்த அளவு விலை உயர்ந்ததில்லை.

19) தொழிற்சாலைகள் மூடுபடலம் நின்றபாடில்லை. பஞ்சாலைகள் மட்டும் 68 மில்கள் மூடிக்கிடக்கின்றன. எஞ்சினீரிங் தொழிற்சாலைகள் பல, உருக்கு இல்லாமல் மூடப்படுகின்றன: பலவற்றில் பூரா வேலையும் நடப்பதில்லை.

20) இந்நிலையில் வேலையில்லாத் திண்டாட்டம் ஒழிவது ஒரு புறமிருக்கட்டும்; குறையக்கூட இல்லை. மாறாக அதிகரித்துக் கொண்டே போகிறது.

பட்ஜெட் காட்டும் உண்மை

21) இந்நிலைக்கு என்ன காரணம்?

இந்திரா காந்தி சர்க்கார் அனுஷ்டிக்கும் கொள்கைகளுக்கும், இதற்கு முந்திய ஒன்றுபட்ட காங்கிரஸ் சர்க்கார் அனுஷ்டித்த கொள்கைகளுக்கும் அடிப்படையான மாறுதல் எதுவும் கிடையாது.

இதை இவ்வாண்டு பட்ஜெட்டில் பார்த்தோம். முன்பிருந்த சர்க்கார்கள் போலவே, இந்திரா சர்க்காரும் ரூ. 220 கோடிக்குமேல்

பாமர மக்கள் வாங்கும் பொருள்களின் மீது புதிய வரிகளைச் சுமத்தியது. மேலும் ரூ.240 கோடிக்குமேல்பற்றுக்குறைபட்ஜெட்டை, அதாவது வருமானத்துக்கு மேல் அதிகமாக புதியக் காகித நோட்டுகளை அச்சடிப்பதன் மூலமாகச் சிலவு செய்வது என்று முடிவு செய்தது.

22) இதுதானே இதுவரையில் மக்கள் தலையில் விலைவாசிகளை ஏற்றி, அவர்கள் வருமானத்தைக் கொள்ளையடித்து பெருமுதலாளிகளும், தரகு மார்க்கெட்டுக்காரர்களும், பெரு நிலச்சுவான்தார்களும் கொழுப்பதற்காக அனுஷ்டித்து வந்த கொள்கைகள்?

23) வெளி நாட்டு உதவியை நம்பியிருக்கும் கொள்கையில் மாற்றம் கிடையாது. ஆனால், மேலை நாடுகளிலேயே நெருக்கடி ஏற்பட்டிருக்கும் போது, அவைகளிடமிருந்து கிடைக்கும் கடன் குறைந்துவிட்டது. கிடைக்கும் உதவியில் பெரும்பகுதி பழைய கடனுக்கான வட்டிக்காகப் போய்விடுகிறது. உதாரணமாக சென்ற ஆண்டு கிடைத்த கடனுதவி ரூ 686 கோடி; அதில் ரூ,486 கோடிவட்டிக்காகப் போய்விட்டது.

24) இந்நிலையில், இந்திய சர்க்கார், வெளி நாட்டு முதலாளிகளும் இந்திய பெரு முதலாளிகளும் கூட்டாகத் தொழில்களை நடத்த வேண்டும் என்ற கொள்கையை இன்னும் தீவிரமாகக்கடைப்பிடித்து, அந்நிய முதலாளிகளை வருந்தி அழைக்கிறது. அவர்கள் மீது முன்பு போடப்பட்டிருந்த சில நிபந்தனைகளும் தளர்த்தப்படுகின்றன.

25) அதே போன்று ஏகபோக முதலாளிகளைக் கட்டுப்படுத்தப்போவதாகக் கூறிய இந்திரா காங்கிரஸ் சர்க்கார் இப்பொழுது, எந்த வகையிலாவது தொழில்கள் வளர்ந்தாக வேண்டும்; அதுதான் உடனடிப் பிரச்சினை என்று கூறி, பெரு முதலாளிகளுக்கு லைசென்ஸ்களை வழங்குகிறது. இவ்வாண்டில் மட்டும், 21 லைசென்ஸ்கள் இவர்களுக்கு வழங்கப்பட்டுள்ளன. (சென்ற ஆண்டு 4)

(26) இப்படியானால் தேசீயமயமாக்கப்பட்ட பாங்குகள் இத்தொழில்களை நடத்துவதற்காக இந்த ஏகபோக முதலாளிகளுக்கு முதலீட்டிற்கும், தொழில்களை நடத்துவதற்கும் பயன்படவேண்டாமா? அப்படியாயின் சிறுதொழில்களுக்கு உதவி செய்வது என்பது எப்படி இந்த பாங்குகளால் சாத்தியம்?

(27) தேசிய மயமாக்கப்பட்ட பிறகும், உணவுதானிய உற்பத்தி அதிகரித்துள்ளது என்று கூறும் சமயத்தில், அறுவடை ஆனவுடன் ஏழை விவசாயிகளிடமிருந்து பொருள்களை வாங்கித் தேக்கி வைத்து அதிகவிலைக்கு விற்பதற்காக இந்த மார்க்கெட்டு சூதாடிகளுக்கு இவ்வாண்டு சென்ற ஆண்டைவிட 100 கோடி ரூபாய்க்கு மேல் அதிகமாகக் கடன் கொடுக்கப்பட வில்லையா?

(28) பசுமைப்புரட்சி என்று பேசுகின்றனர். உண்மையில், பிரதானமாக கோதுமையும் ...

தான் அதிகரித்துள்ளது. மற்ற விவசாயப் பொருள்களின் உற்பத்தியில் உயர்வில்லை. மாருக பருத்தி உற்பத்தி மிகவும் குறைந்திருப்பதனுல் வெளிநாட்டிலிருந்து அதிகப் பஞ்சு இறக்குமதி செய்யவேண்டி வந்தது. அடுத்த ஆண்டு மேலும் அதிகமாக இறக்குமதி செய்ய வேண்டும் என்று வெளிநாட்டு வியாபார மந்திரி திரு. லலித்நாராயண் மிஸ்ராவே கூறியிருக்கிருர்.

(29) அது ஒருபுறமிருக்க, இந்த பசுமைப்புரட்சியின் விளைவாக யாருக்கு லாபம் கிடைத்தது? டிராக்டர்கள், பம்புசெட்டுகள், ரசாயனஉரம் முதலியவை வாங்குவதற்கு மேல்தட்டிலுள்ள நிலச்சுவான்தார்களுக்குச் சர்க்கார் கடன் உதவிசெய்து அவர்கள்கொழுத்தனர். சாதாரண சிறு நிலச்சொந்தக்காரர்கள் நிலத்தை இழக்க வேண்டிவந்தது—கடன் பளுவின் காரணமாய். இத்தகைய உற்பத்தியின் காரணமாய் குத்தகைக்கு எடுத்து நிலத்தை உழுபவர்கள் கையிலிருந்து நிலம் பறிக்கப்பட்டது. மேலும், விவசாயிக்கூலிகளுக்கு வேலையில்லாத்திண்டாட்டம் அதிகரித்தது. இவ்வளவு விலைவாசிகள் ஏறிய போதிலும், பெருநிலச் சொந்தக்காரர்கள் சர்க்கார் உதவியினுல் விளைச்சலை அதிகரித்து அதிகப்பணம் சம்பாதித்தபோதிலும், விவசாயத் தொழிலாளிகளுக்குக் கூலி உயர்வு என்பது கிடையாது.

(30) இதுவரையில் செய்த நிலச்சீர்திருத்தச் சட்டங்களினுல் பயனென்றுமில்லை. இனி ஒழுங்கான நிலச்சீர்திருத்தம் செய்யப்போவதாக பிரச்சாரம் செய்த இந்திராகாந்தி, மாநில முதலமைச்சர்களின் எதிர்ப்பின் காரணமாக, இப்பொழுது ஒரு கமிட்டியை நியமனம் செய்திருக்கின்றனர். உருப்படியான நிலச்சீர்திருத்தப் பிரச்சினையை ஊறுகாய் போடுவதற்கான வழி இது

(31) இந்நிலையில் 'வறுமை ஒழிப்பு' வேலையில்லாத் திண்டாட்ட ஒழிப்பு, என்ற கோஷங்களெல்லாம் தேர்தலில் ஜெயிப்பதற்காக கையாளப்பட்ட தந்திரங்கள் என்பது படிப்படியே அம்பலப்பட்டு வருகிறது.

இந்தப் பிரமைகள் நீங்க நீங்க, மக்கள் இந்தக் கொள்கைகளின் விளைவாக ஏற்படும் கஷ்டங்களை எதிர்த்துப் போராடுவார்கள் என்பதை உணர்ந்துதான் இந்திரா சர்க்கார், தேர்தல் முடிந்தவுடனே பார்லிமெண்டு கூடுவதற்கு முன்னதாகவே பிரகடனப்படுத்திய அவசரச் சட்டம்—தடுப்புப் பாதுகாப்புச் சட்டம் அதாவது விசாரணையின்றி, இந்தப் போராட்டங்களுக்குத் தலைமை தாங்கும் தலைவர்களையும் ஊழியர்களையும் சிறையிலடைக்கும் சட்டம்

(32) மேலும் நெருக்கடியின் பேரால், சர்க்கார் முன்வைத்த முதல் யோசனை சம்பள முடக்கம்—விலைவாசி முடக்கம் அல்ல. அதே போன்று போனசை உற்பத்தியோடு இணைக்க வேண்டும் என்ற யோசனையும் பலமாக வற்புறுத்தப்படுகிறது. இவைகளெல்லாம் மேலும் தொழிலாளி வர்க்கத்தின் மீதும், உழைப்பாளி மக்களின் மீதும் தீவிரமாக்கப்படவிருக்கிற தாக்குதல்களின் அறைமணி யோசனையாகும்.

அடக்குமுறை

(33) தேர்தலுக்குப் பிறகு உள்ள இந்தக் குறுகிய காலத்திற்குள்ளேயே, மக்கள் பிரமைகள் சிறிது சிறிதாக நீங்க ஆரம்பித்து, போராட்டங்கள் வெடித்துள்ளன. அந்தப் போராட்டங்களை அடக்குவதற்காகக் கடுமையான அடக்குமுறை எல்லா மாநிலங்களிலும் ஏவிவிடப்பட்டுள்ளன. மேற்கு வங்கத்தில் இந்த அடக்குமுறை உச்சகட்டத்திற்குச் சென்றுள்ளது. இவைகளைக் கொண்டெல்லாம் போராடும் மக்களை அடக்க முடியாமற் போகவே, இந்திரா சர்க்கார் இன்று குண்டர் படைகளைத் திரட்டி, போலீஸ் உதவியுடன் மார்க்சிஸ்டுக் கட்சித் தோழர்களையும், ஜனநாயக இயக்க ஊழியர்களையும் கொலை செய்யும் வேலையில் இறங்கியுள்ளது. இதுவரையில் இந்தப் படுகொலைக்கு ஆளான நம் அருமைத் தோழர்களின் எண்ணிக்கை 500ஐ எட்டிவிட்டது. மேலும், 500க்கு மேற்பட்டவர்களை விசாரணையின்றி சிறையிலடைத்தும், ஆயிரத்துக்கு மேற்பட்டவர்களைப் பொய் வழக்குகளில் ஈடுபடுத்தி ஜாமீனில் விட மறுத்து சிறையில் வைத்துள்ளது. ஒரு இலட்சம் தோழர்கள் மீது வாரண்டுகள் பிறப்பித்துள்ளது. இராணுவ உதவியைக் கொண்டு, கிராமங்களைச் சுற்றி வளைத்து, போலிசை உள்ளே அனுப்பி வலைவீசி விவசாயி மக்கள் கைவசம் உள்ள நிலத்தைப் பிடுங்க முயற்சிசெய்கிறது. சுருங்கக் கூறவேண்டுமெனில் அரை பாசிஸ ஆட்சி இன்று மேற்கு வங்கத்தில் நடைபெறுகிறது

34) நாடெங்கிலும் இந்த அடக்குமுறைக்குப் பலியான தோழர்களுக்கு இந்த மாநாட்டிலிருந்து நாம் புரட்சிகரமான அஞ்சலிகளைச் செலுத்துவோமாக. மேலும், இவ்வளவு அடக்குமுறைக்கிடையே போராடிக்கொண்டிருக்கும் மக்களை நாம் வாழ்த்துவோமாக. அவர்களுடைய தியாகச்சுடரை மங்கவொட்டாமல் மேலும் இயக்கத்தை வளர்ப்பது என்று சபதமேற்போமாக!

பங்களாதேஷ்

35) ஏற்கனவே பொருளாதார நெருக்கடி ஆழமாக வளர்ந்திருக்கும் நிலையில், கிழக்குப் பாகிஸ்தான் மக்களின் ஜனநாயக—மாநில சுயாட்சிப் போராட்டத்தை நசுக்குவதற்காக யாஹ்யாகான் இராணுவத்தை அம்மக்கள் மீது ஏவிவிட்டு, வரலாறு கண்டிராத வகையில் நரவேட்டையில் இறங்கினான். அதனால், அம்மக்கள் ''சுதந்திரபங்களாதேஷ்'' வேண்டும்என்று அறிவித்துவிட்டு, இராணுவ ஆட்சியை எதிர்த்துப் போராடுகின்றனர். இந்த நரவேட்டையிலிருந்து தப்புவதற்காக இதுவரையில் சுமார் 1 கோடி மக்கள் இந்தியாவில் அகதிகளாக வந்துள்ளனர். இதனால் ஏற்படும் செலவு வேறு, மேலும் நாட்டுப் பொருளாதாரத்தைச் சீர்குலைக்கும் நிலை ஏற்பட்டுள்ளது

36) நமது அண்டை நாட்டில் நடக்கும் இந்த விடுதலைப் போராட்டத்திற்கு பரிபூரண ஆதரவு அளித்து, அதை வெற்றி

பெறச் செய்யவேண்டும் என்ற ஆர்வம் இந்தியா பூராவிலும் ஏற்பட்டிருப்பதில் வியப்பில்லை. பயனளிக்கக்கூடிய வகையில் இவ்வாறு உதவியளிப்பதற்காக நம் சர்க்கார் பங்களாதேஷ் சர்க்காரை அங்கீகரிக்கவேண்டுமென்று நமது கட்சியும், நாட்டுமக்களும் கோருகின்றனர்.

37) ஆயினும் இந்திரா சர்க்கார் இந்தக் கோரிக்கையை இதுவரையில் தட்டிக்கழித்து வந்திருக்கிறது. காரணம் என்ன? வெளி நாடுகளின் உதவியை நம்பியே நமது நாட்டின் பொருளாதாரம் உள்ளதால் அந்த உதவி நிறுத்தப்படுமானால் என்ன ஆகும் என்ற கவலையினால் ஏற்படும் தயக்கமே இதற்குப் பிரதானகாரணம்.

38) இத்தகைய சிக்கலான நிலையில் மாட்டிக்கொண்டிருப்பதனால்தான் சமீப காலத்தில் சீனாவுடன், பகைமையைக் கைவிட்டு நல்லுறவு ஏற்படுத்திக்கொள்ளவேண்டும் என்ற உணர்வு இந்திய சர்க்காருக்கு ஏற்பட்டுவருகிறது. அந்த விருப்பத்தை வெளிப்படையாகவே இந்திரா காந்தி இரண்டொருமுறை வெளியிட்டிருக்கிறார்.

(39) 10 ஆண்டுகளுக்கு முன்பே நாம் இதை எடுத்துக்கூறியதற்காக நம்மை சீனாவின் ஏஜெண்டுகள் என்று பிரச்சாரம் செய்து, இரண்டு முறை, 1962—63-லும், 1964—66-லும் சிறையிலடைத்தவர்கள் இன்று அந்த உண்மையை உணரவேண்டிய நிலையை சர்வதேச வளர்ச்சிப் போக்கும், உள்நாட்டு வளர்ச்சிப் போக்கும் ஏற்படுத்தியுள்ளன. இந்தப் பத்தாண்டுகளில் 12,000 கோடி ரூபாய் இராணுவச் செலவு செய்தது எல்லாம் வீண். அயல் நாட்டவர்களைச் சார்ந்து நின்றதன் விளைவு, அவர்களுடைய சீனப்பகைமையை இந்திய சர்க்காரும் மேற்கொள்ளவேண்டி வந்தது. அது எப்படி இருந்தபோதிலும், இப்பொழுதாவது இந்த உணர்வு ஏற்பட்டிருப்பதை நாம் வரவேற்கவேண்டும் இந்த உணர்ச்சி பயன்தரத்தக்க வகையில் செயலாக மாறவேண்டுமென்பதே நமது விருப்பம்.

தமிழக நிலையும், தி. மு. க. அரசியல் மக்கள் விரோத நடைமுறையும்

(40) தமிழ் நாட்டின் பொருளாதாரம், இந்தியப் பொருளாதாரத்தின் பகுதியே. எனவே இந்தக்கால கட்டத்தில் இந்தியா பூராவிலும் வளர்ந்துவந்த பொருளாதார நெருக்கடி தமிழ் நாட்டிலும் வளர்ந்துள்ளது. கடந்த 4, 5 ஆண்டுகளாக புதிதாகத் தொழிற்சாலைகள் நிறுவப்படுவது மிகக்குறைவு. மாறாக, மூடப்பட்டுள்ள பஞ்சாலைகள் அதிகரித்துள்ளன.

(41) தமிழ் நாட்டில் அதிகமான மக்கள் ஈடுபட்டுள்ள கைநெசவுத் தொழிலில், நூல் விலை உயர்வால், மில் துணியோடு போட்டி போட முடியாத நிலையில் எண்ணற்ற கைத்தறிகள் மூடிக்[illegible] விசைத்தறிகளை, அரசின் ஆதா

வுடன் ஸ்தாபித்துள்ளனர் இதன் விளைவு, ஆயிரக்கணக்கில் கைநெசவுத் தொழிலாளிகள் வேலையிழந்துள்ளனர்.

(42) அதே போன்று பல என்ஜினியரிங் தொழிற்சாலை களுக்கும், பவுண்டரிகளுக்கும் இரும்பும் உருக்கும் சப்ளை இல்லாத தால் நெருக்கடி ஏற்பட்டுள்ளது,

(43) கிராமப்புறத்திலும், சிறு நிலச்சொந்தக்காரர்கள், சாகுபடியாளர்கள் ஆகியோருக்குக் கடன் பளுவினால் ஏற்பட்ட கஷ்டம் அதிகரித்து, நிலத்தை விற்றுவிடவேண்டிய நிலை ஏற்பட்டுள்ளது.

(44) இப்படிப்பட்ட நிலையில், மாநில சர்க்கார் மக்களின் நலனுக்காகப் பணியாற்றவேண்டுமாயின், மக்களுடைய போராட்டங் களை முதலாளிகளுக்கு எதிராகவும், நிலப்பிரபுக்களுக்கு எதிராகவும் ஊக்குவிப்பதன் மூலமாகவே சிறிதளவு நன்மை செய்ய முடியும். அதனால் பலம் பெறும் ஜனநாயக இயக்கத்தின் பலத்தைக்கொண்டு மத்திய சர்க்காரின் கொள்கைகளுக்கு எதிராகப்போராட்ட சக்திகளை வளர்க்கும் பாதையில் போவது ஒன்றுதான் இன்றைய அரசியல் சட்டத்தின் கீழ் சாத்தியம்.

45) தமிழ்நாட்டில் 1967ல் ஏற்பட்ட பொதுத் தேர்தலில் காங்கிரசை எதிர்த்து, தேர்தலுக்காக நமது கட்சியோடும் மற்றும் சில கட்சிகளோடும் உடன்பாடு கண்டு வெற்றி பெற்ற தி. மு. க, சர்க்கார் இந்தப் பாதையில் போவதற்குத்தயாராக இல்லை. அதனால் அதன் போக்கும் மத்தியிலிருக்கும் காங்கிரஸின் போக்கு மாதிரியே இருந்ததில் வியப்பில்லை.

46) அது அதிகாரத்திற்கு வந்தவுடன், மக்களுக்கு ஏற்பட்ட நம்பிக்கையின் காரணமாயும், மேற்கு வங்கத்திலும் கேரளத்திலும் அரசினால் ஊக்குவிக்கப்பட்ட போராட்டங்களின் உதாரணத்தினாலும் தொழிலாளர்கள் போராட்டங்களும், நமது விவசாயத் தொழிலாளர்கள் தளமான கீழத்தஞ்சையில் விவசாயத் தொழிலாளர் போராட்டங்களும் வெடிக்க ஆரம்பித்தன. அந்த ஆரம்ப காலத்தில் போலீசைக் கொண்டு இப்போராட்டங்களை நசுக்குவதற்குத் தயக்கம் காண்பித்து, சர்க்காரின் செல்வாக்கைக்கொண்டு சமரசம் செய்வதற்கான முயற்சியிலேயே ஈடுபட்டது.

47) இந்தப் போராட்டங்கள் மேலும் அதிகமாக வளர ஆரம்பித்தவுடன், தொழிலாளிகளிடம் அதற்குள்ள அரசியல் செல்வாக்கைப் பயன்படுத்தி, இந்தப் போராட்டங்களில் அவர்கள் கலந்து கொள்ளாமலிருப்பதற்கான முயற்சியில் ஈடுபட்டது. அதற்காக, இந்தப் போராட்டங்களெல்லாம் தி.மு.க. அரசைக் கவிழ்ப்பதற்கான போராட்டங்கள் என்ற பிரச்சாரத்தைக் கட்டவிழ்த்து விட்டது. இதனால் சில சமயங்களில் போராட்டங்களைத் தவிர்க்க முடிந்தபோதிலும், முதலாளிகளின் தாக்குதல்களினால், பின்னால்

தொழிலாளிகள் கிளர்ச்சிகளில் கலந்துகொண்டு உறுதியாகப் போராடத்துவங்கினர்.

48) இந்த நிலைமை ஏற்பட்டவுடன், போலீஸ் அடக்குமுறை ஏவிவிடப்படுவது தொடர்ந்து அதிகரித்து வருவதைப் பார்க்கிறோம்.

அதே சமயத்தில், தொழிலாளர்களின் ஒற்றுமையைச் சீர்குலைப்பதற்காக திராவிட முன்னேற்றத் தொழிற்சங்க மையம் என்ற அமைப்பை உருவாக்கி எல்லா இடங்களிலும் போட்டித் தொழிற் சங்கங்களை உருவாக்கும் முயற்சியில் ஈடுபட்டுள்ளது. தொழிலாளர்களின் ஒற்றுமையைச் சீர்குலைப்பது, அடக்குமுறை ஆகிய இரு ஆயுதங்களை இப்பொழுது உபயோகித்து வருகிறது. இந்தச் சீர்குலைவுக்குச் சர்க்கார் இயந்திரம் பூராவும் பயன்படுத்தப்படுகிறது.

49) தி. மு. க. அரசின் இந்தப் போக்கு அதன் வர்க்க அடிப்படையிலிருந்து எழுகிறது. தி. மு. க. வை நாம் ஒரு பூர்ஷுவா ஜன நாயகக் கட்சி என்று நிர்ணயித்தோம். அதிகாரத்திற்கு வருவதற்கு முன்பு, தொழிலாளர்கள், உழவர்கள் படும் அவஸ்தையைப் பற்றித் தன் பிரச்சாரத்தில் கண்ணீர் வடித்தது. தனது இலட்சியம் ஒரு சோஷியலிஸ சமுதாயத்தை ஸ்தாபிப்பது என்று பறை சாற்றியது தொழிலாளர்கள், விவசாயிகள் நடத்தும் போராட்டங்களின் பால் அனுதாபத்தைத் தெரிவித்தது. இந்த மக்களின் ஆதரவைப் பெறுவதற்காகச் செய்யப்பட்ட சாகசங்கள் இவை.

(50) காங்கிரஸ்கட்சி முன்பு—சுதந்திரப்போராட்டகாலத்தில் செய்த சாகஸங்களும் இதே போன்றவைதானே. பிறகு சுதந்திரம் பெற்று, ஆட்சிபீடத்தில் அமர்ந்த பிறகு, ஒருபுறம் அடக்குமுறையையும், மறுபுறம் தொழிற்சங்க ஒற்றுமையைச் சீர்குலைக்க ஐ என் டி யூ. சி. என்ற தொழிற்சங்க மையத்தை அமைத்து, போட்டி சங்கங்களை அமைத்துப் போராட்டங்களைச் சீர்குலைக்கத் தொடர்ச்சியாகச் செய்துவரும் முயற்சியையும் பார்த்தால், தி மு. க சர்க்காரின் சாகசமும் அதே போன்றதுதான் என்பது தெள்ளத்தெளிவாகும்.

அதிகாரத்துக்கு வருவதற்கு முன் எந்த வகையிலும் வர்க்கப் போராட்டத்தில் ஈடுபட்டது கிடையாது — ஆனால் சோஷியலிஸம் தனது இலட்சியம் என்று கோஷித்தது. அதிகாரத்திற்கு வந்த பிறகு அது தொழிற்சங்கங்களை அமைப்பது வர்க்கப்போராட்டத்தை வளர்ப்பதற்கல்ல; அதை சீர்குலைப்பதற்காகவே.

அது மக்களைத் திரட்டியது, தேசீய இனப்பிரச்சினையில் வெறியைக்கிளப்பி வளர்த்ததன் மூலமாகவே என்பதையும் மறந்துவிடக் கூடாது.

(51) அதிகாரத்திற்கு வந்தபிறகு, தி. மு. க. அரசு மத்திய சர்க்காரோடு வர்க்கப் பிரச்னைகள் எதிலும் மோதுவதற்குத் தயாராக இருந்ததில்லை. உதாரணமாக. மூடப்பட்ட பஞ்சாலைகளைத்

திறப்பதற்காக மத்திய சர்க்கார் நடவடிக்கை எடுக்கவேண்டும் என்ற பிரச்சினையில் தமிழக பூராவும் தொழிலாளிகள் வேலை நிறுத்தம் செய்தது, சர்க்காரும் மக்களும்கூடி மத்திய சர்க்காரை எதிர்க்க வேண்டும் என்று நாம் காலம்சென்ற திரு அண்ணாதுரையிடம் வற்புறுத்தியபோது, "இப்படிப்பட்ட பிரச்சினையில் தன் அரசாங்கம் இருக்குமா, கலைக்கப்படுமா என்ற நிலையை உண்டாக்கத் தயாராக இல்லை" என்று தெளிவாகக் கூறினர்.

(52) விவசாயம் சம்பந்தப்பட்ட மட்டில், காங்கிரஸ்கட்சியின் கொள்கைக்கும், தி மு க சர்க்காரின் கொள்கைக்கும் வித்தியாசம் கிடையாது. பெருநிலச் சுவான்தார்களுக்கும், பணக்கார விவசாயிகளுக்கும் உரம், பம்புசெட்டுகள், டிராக்டர்கள் முதலியவைகளை வாங்குவதற்குக் கடன் உதவிசெய்து, அவர்களின் மூலம் உற்பத்திப் பெருக்கத்துக்கு முயற்சி செய்து, காங்கிரஸ் சர்க்கார் போலவே தி. மு க சர்க்காரும் "பசுமைப் புரட்சி"யைப் பற்றித்தான் டமாரமடிக்கிறது. கூட்டுறவு பேங்குகள் இந்த மேல் தட்டுக்காரர்களுக்குத்தான் பயன்படுகின்றன,

(53) நிலச்சீர்திருத்தம் சம்பந்தப்பட்டமட்டில். எதிர்க்கட்சியாக இருந்த காலத்தில் காங்கிரஸ் சர்க்கார் கொண்டுவந்த உச்சவரம்பு மசோதாவை பயனற்றது என்று எதிர்த்த தி. மு. க., ஆட்சிக்கு வந்த பிறகு கொண்டு வந்த திருத்த மசோதாவிலும் கடைசி நேரத்தில் சில திருத்தங்களைக் கொண்டுவந்து அதையும் பயனற்றதாக்கி விட்டது அதனுல், இந்த சட்டத்தினுலும் நிலமில்லாத விவசாயிகளுக்கோ, விவசாயத் தொழிலாளிக்கோ நிலம் கொடுப்பதற்கு உபரிநிலம் ஒன்றும் கிடைக்கவில்லை.

(54) முதலமைச்சர் திரு, கருணாநிதி, சமீபகாலத்தில் சட்டத்திலுள்ள ஓட்டைகளைப் பயன்படுத்தி, பெரும் மிராசுதார்கள் நிலங்களைத் தங்கள் கையிலேயே வைத்திருக்கிருர்கள் என்று கூறுகிருர். ஆனுல், இந்த ஓட்டைகள் வேண்டுமென்று தானே வைத்துச் சட்டம் நிறைவேற்றப்பட்டது?

(55) நில உரிமைகள் பதிவு சட்டம் என்று ஒரு சட்டம் நிறைவேற்றப்பட்டது. இதன் மூலம் குத்தகைதார்கள் யார் யார் என்று பதிவு செய்யப் போவதாகக் கூறினுர்கள். ஆனுல் அந்தச் சட்டம் அமுலாக்கப்பட்டு பதிவு நடவடிக்கைகள் எடுக்கப்பட்ட மூன்று மாவட்டங்களில் அதிகார வர்க்கத்தினுலும், தி மு. க. பிரமுகர்களுக்கும் நிலப்பிரபுக்களுக்கும் உள்ள உறவின் காரணமாகவும். இந்த நடவடிக்கைகள் கவைக்குத வாதவையாகிவிட்டன என்று அந்த நடவடிக்கைக்காக நியமிக்கப்பட்ட அதிகாரி திரு. பத்திரிநாத் தேதன் அறிக்கையில் கூறியிருக்கிருர். ஆனுல், அத்தகைய அறிக்கையை அவர்சமர்ப்பிக்கவில்லை என்று திரு. கருணாநிதி கூறி இந்த சட்டம் தோல்வியுற்றதை மறைப்பதற்கு முயற்சி செய்கிருர். மேலும் மூன்று மாவட்டங்களில் பதிவு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது. அங்கும் முந்திய மாவட்டங்களில் ஏற்பட்ட கதிதான் ஏற்படும் என்பதில் சந்தேகமில்லை.

(56) விவசாயத் தொழிலாளர்கள் சம்பந்தப்பட்டமட்டில், கீழத்தஞ்சையில் நடந்த போராட்டங்களை அடக்கி ஒடுக்க போலீஸ் உதவியை நிலச்சுவான்தார்களுக்கு அளித்து, எண்ணற்ற வழக்குகளில் விவசாயத் தொழிலாள ஊழியர்களை ஈடுபடுத்தி, பூந்தாழங்குடியில் துப்பாக்கிப் பிரயோகம்செய்து, அப்படியும் அடக்கமுடியாமற்போன நிலை ஏற்பட்டபோது, கீழவெண்மணியில் மிராசுதார்கள் குண்டர்களைக்கொண்டு 47 விவசாயத் தொழிலாளர் பெண்களையும் குழந்தைகளையும் கொளுத்திப் படுகொலை செய்தபிறகு, மாவட்டம் பூராவும் விவசாயத் தொழிலாளிகள் வீராவேசம் பூண்டு ஆர்த்தெழுந்து திருவாரூரில் இதுவரையில் கண்டிராத ஆர்ப்பாட்டம் நடத்தியபிறகு, இனி நிலைமை கட்டுக்கடங்காமற்போய்விடும் என்ற நிலை ஏற்பட்ட பிறகுதான் கணபதியாபிள்ளைக் கமிஷன் நிறுவப்பட்டு, பிறகு கீழதஞ்சைக்கு மட்டும் குறைந்தபட்சக்கூலி நிர்ணயிக்கப்பட்டது. மாநிலத்தின் மற்ற பகுதிகளுக்கு இதுவும் கிடையாது. புதிய சட்டம் எதுவும் தேவையில்லை. இந்திய சர்க்கார் 20 ஆண்டுகளுக்கு முன்பு நிறைவேற்றிய குறைந்தபட்சக் கூலிச் சட்டத்தின் கீழ் அவ்வப்போது விவசாயத் தொழிலாளர்களின் கூலியை நிர்ணயிப்பதற்குச் சர்க்காருக்கு அதிகாரம் உண்டு. ஆனால், காங்கிரஸ் சர்க்காரும் இந்தச் சட்டத்தைப் பயன்படுத்தவில்லை. தி. மு. க. சர்க்காரும் இந்தச் சட்டத்தைப் பயன்படுத்தவில்லை!

(57) இப்படிப்பட்ட நிலையில் தமிழ்நாட்டில் தொழில்களை நிறுவுவதற்கு மூலதனத் தட்டுப்பாடு ஏற்பட்டிருக்கும்போது, எந்த தி மு. க, எதிர்க்கட்சியாக இருந்த காலத்தில் வடநாட்டு ஏகபோக முதலாளிகள் வளர்க்கப்படுகின்றனர் என்று காங்கிரஸ் அரசின் மீது குற்றம் சாட்டியதோ. அதே தி. மு. க மந்திரிகள் இன்று வடநாட்டிலுள்ள டாட்டா, பிர்லா, போன்ற பெரு முதலாளிகளைத் தமிழ் நாட்டிற்கு வந்து முதலீடு செய்யும்படி வருந்தி வருந்தி அழைக்கின்றனர். அவர்களுக்கு, இங்குத் தொழில் அமைதிக்கு ஏற்பாடு செய்வோம் என்று உத்திரவாதம் அளிக்கின்றனர். தொழிலாளிகள், சுரண்டலை எதிர்த்துக் கிளர்ச்சி செய்தால், கடுமையான அடக்குமுறையைக் கொண்டு அந்தப் பெருமுதலாளிகளின் நலன்களைப்பேணி பாதுகாப்போம் என்பதுதான் இதற்குப் பொருள்.

அது மட்டுமல்ல, காங்கிரஸ் அரசு விதித்திருக்கும் சில கட்டுப்பாடுகளைக்கூடப் பரிபூர்ணமாகக் கைவிட்டு, இந்த ஏகபோக முதலாளிகளுக்கு ஊக்கம் அளிக்கவேண்டும் என்று தொழில் அமைச்சர் வற்புறுத்துகிறார்.

(58) மேலும், அந்நிய ஏகாதிபத்திய நாடுகளிலுள்ள ஏகபோக முதலாளிகள் முதலீடு செய்வதற்கு மேலும் சலுகைகள் அளிக்கப்படவேண்டும் என்றும் தமிழக அரசு வற்புறுத்துகிறது. அதாவது, தமிழக மக்களும் இந்திய மக்களும் மேலும் ஏகாதிபத்தியச் சுரண்டலுக்கு இரையாகவேண்டும் எனக்கூறுகிறது.

(59) இத்தகைய கொள்கைகளினால் தனது செல்வாக்கை நீடித்து வைத்திருப்பது சாத்தியமல்ல. ஆகவே, அவ்வப்போது

மொழிப்பிரச்சினையைக் கிளப்பி, காவிரியாற்றுத் தண்ணீர் பிரச்சினை போன்ற இனவெறியூட்டும் பிரச்சினையைக் கிளப்பி தமிழ் மக்களின் ஜனநாயகப்போராட்ட உணர்வுகளைதிசைதிருப்பிவிட முயற்சிக்கிறது. 'தமிழ் நாடு' என்று பெயர் வைக்க மத்திய சர்க்காரைச் சம்மதிக்க வைத்து விட்டோம், வறட்சி நிவாரணத்திற்காக எந்த மாநிலத்திற்கும் வழங்காத அளவு நிதி வழங்கும்படி இந்திரா காந்தியை செய்துவிட்டோம், பிச்சைக்காரர்கள் மறு வாழ்வு, என்றெல்லாம் பேசி, மக்களின் போராட்ட உணர்வுகளை திசை திருப்ப முயற்சிக்கிறது.

60) ஆயினும், தி. மு. க. வை ஆட்சி பீடத்தில் ஏற்றிய மக்கள் ஆசாபங்கமடைந்து வருகின்றனர். அதனால், மாணவர்கள், வேலையில்லாத் திண்டாட்டம் தங்களை எதிர் நோக்கி நிற்பதைக் கண்டு, குமுறி எழுகின்றனர். பல கல்லூரிகளில் மாணவர் போராட்டங்களை நடத்தினர். ஆசிரியர்களிடமும் ஏமாற்றம் ஏற்பட்டிருக்கிறது. அவர்கள் நடத்திய ஆர்ப்பாட்டத்தைக் கண்ணுற்ற மாநில அரசு, அவர்களின் மீது சீறி விழுகிறது

மாநில அரசு ஊழியர்களிடையேயும் அதிருப்தி வளர்கின்றது. கிளர்ச்சிகளை நடத்துகின்றனர். அதில் முன்னணியில் இருக்கும் ஊழியர்களின் மீது நடவடிக்கைகள் எடுத்து, மற்ற ஊழியர்களை அச்சுறுத்தி, அவர்களது கிளர்ச்சிகளை ஒடுக்கிவிடப்பார்க்கிறது

இவைகளின் விளைவாக, 1967 தேர்தலுக்கு முன்பிருந்த செல்வாக்கு இப்பொழுது மாணவர்கள், பள்ளி ஆசிரியர்கள், அரசு ஊழியர்கள் மத்தியில் இல்லை. சிறுகச் சிறுகத் தேய்ந்து வருகிறது.

(61) ஆயினும் இந்திராகாந்தி பார்லிமெண்டைக் கலைத்தவுடன், இந்திரா காங்கிரசோடும், வலதுசாரி கம்யூனிஸ்டுக்கட்சியோடும், மற்றும் முன்பிருந்த கட்சிகளோடும் (சுதந்திரா நீங்கலாக) கூட்டணி அமைத்துக்கொண்டு, சட்டசபைத் தேர்தலையும் அதே சமயத்தில் நடத்தி, முற்போக்குக் கூட்டணி என்று கட்சி அளித்து, அதிகாரத்திலிருப்பதனால் கிடைக்கக்கூடிய சகல வசதிகளையும் தயக்கமின்றிப் பயன்படுத்திக்கொண்டு, சட்டசபைத் தேர்தலில் பெரிய வெற்றிபெற்றது.

(62) தேர்தலுக்குப்பிறகு அது கடைப்பிடிக்கும் கொள்கைகள், ஏற்கனவே கடைப்பிடித்துவந்த கொள்கைகளின் தொடர்ச்சியே மாநில சுய-ஆட்சி என்ற கோஷத்தைக் கிளப்பியபோதிலும், அதற்காகப் போராடத் தயாராயில்லை. உண்மையில் அதன் கோரிக்கையெல்லாம். தொழில்களுக்கு லைசென்ஸ் வழங்கும் அதிகாரம் மாநில அரசின் கைக்கு மாற்றப்பட வேண்டுமென்பதுதான், இப்படி மாற்றப்படுவதனால் மட்டும், தமிழகத்தின் பிரச்சினைகள் தீர்ந்துவிடுமா? முதலீட்டுக்கான வசதிகளுக்கு எங்கே போவது? பாங்கிகளையும், நிதி நிருவனங்களையும் தானே சார்ந்து நிற்கவேண்டும்? அவைகள் மத்திய சர்க்காரின் ஆதிக்கத்திலிருக்கும்போது, லைசென்ஸ் வழங்கிவிடுவதனால் தொழிற்சாலைகள் அமைந்துவிடுமா?

(63) உண்மையைச் சொல்லப்போனால், இந்திரா காங்கிரஸின் கொள்கைகளுக்கு மாறான கொள்கைகள் தி. மு. க. வுக்குக் கிடையாது எனவே, நெருக்கடிவளரத்தான் செய்யும்.

நமது வேலைகள்—பரிசீலனை

(64) இந்த காலகட்டத்தில் நம்முடைய கட்சியின் அரசியல் நிலையும், இயக்க நடவடிக்கைகளும் எவ்வாறு இருந்திருக்கின்றன என்று பரிசீலிக்க வேண்டும். இதைப் பரிசீலிக்கையில், நாம் ஒரு சிக்கல் நிறைந்த சூழ்நிலையில் பணியாற்ற வேண்டிவந்தது என்பதை நினைவில்வைத்துக்கொள்ள வேண்டும் கேரளம், மேற்குவங்கம் மற்றும் இதர மாநிலங்கள் போன்றோ, அன்றாடப் போராட்டங்களில் காங்கிரஸ் அரசுக்கும் நமக்கும் மோதல் இல்லை. இம்மாநிலத்தில் ஆட்சியிலமர்ந்திருப்பது தி. மு க அது காங்கிரஸ் கட்சியை எதிர்த்துவந்த ஒரு எதிர்க்கட்சி மேலும், இந்திரா காங்கிரசோடு கூட்டுச்சேரும் வரையில், அகில இந்திய மட்டத்தில், அது காங்கிரஸ் கட்சிக்கு ஒரு எதிர்க்கட்சியாகவே காட்சியளித்தது அதுமட்டுமல்ல, நமது கட்சியுடனும் தேர்தல் உடன்பாட்டின் அடிப்படையில் அது ஆட்சிபீடம் ஏறியது.

(65) இந்நிலையில் நமது நடவடிக்கைகள் காங்கிரசுக்கு வால் பிடிப்பதாகவும் இருக்கக்கூடாது, தி. மு. க. வுக்கும், அதோடு தேர்தல் உடன்பாடு செய்துகொண்டோமென்ற காரணத்தினாலும் சந்தர்ப்ப வாதத்திற்கு இரையாகி வால்பிடிப்பதாகவும் இருக்கக்கூடாது. நமது நடவடிக்கைகளும் கொள்கைகளும் இவ்விரண்டு கட்சிகளின் கொள்கைகளுக்கு மாறாக நமது மாற்றுக் கொள்கைகளையும், திட்டத்தையும் மக்கள் மத்தியில் எடுத்துச் செல்லக்கூடியதாக இருக்க வேண்டும் நமது கொள்கையையும், திட்டத்தையும் சரி என்று மக்கள் புரிந்துகொள்ளக்கூடிய வகையில், மக்களது உணர்வு மட்டத்தைக் கணக்கிலெடுத்துக்கொண்டு நமது பிரச்சாரமும் இயக்க நடவடிக்கைகளும் இருந்தாக வேண்டும்.

(66) மூன்றாண்டுகளுக்கு முன்பு நடந்த சென்ற மாநாட்டில், அதுவரையில் நாம்கடைப்பிடித்தகொள்கைகளையும், நடைமுறையையும் பரிசீலித்துப் பார்த்தாகிவிட்டது. ஆயினும் சில முக்கியமான விஷயங்களை இங்கு ஞாபகப்படுத்திக்கொள்வது நல்லது.

(67) 1967 பொதுத் தேர்தல் முடிந்த 2 மாதத்திற்குள் திருமங்கலம் தொகுதிக்கு உபதேர்தல் வந்தது. அத்தொகுதிக்கு சுதந்திராக் கட்சி அபேட்சகரை நிறுத்தி, தி மு க. காங்கிரஸ் எதிர்ப்பின் பேரால் நமது ஆதரவைக் கோரியது. ஆனால் நாம் நமது கொள்கையில் உறுதியாக நின்று சுதந்திராவுக்கும் ஆதரவு இல்லை, காங்கிரசுக்கும் ஆதரவு இல்லை என்று திட்டவட்டமான முடிவை அறிவித்தோம்.

(68) தி. மு. க. நாம் நடத்திய தொழிற்சங்க, விவசாயத் தொழிலாளர்கள் போராட்டங்களைக் கண்டு சீறிவிழுந்தபோதிலும், அப்போராட்டங்களினால் மத்திய சர்க்காரிடமிருந்து மாநில சர்க்காருக்கு ஆபத்து ஏற்படும் என்று தி. மு. க. தலைவர்கள் நம்மிடம் கூறிய போதிலும். நாம் நமது போராட்டங்களைக் கைவிடவில்லை. மாறாக நாளுக்குநாள் வளர்த்துக்கொண்டு போனோம்.

(69) சட்டசபையில் எதிர்க்கட்சியாகச் செயல்படுவது என்று முடிவு செய்தோம். மொழிக் கொள்கை சம்பந்தமாக சட்ட சபையில் கொண்டுவரப்பட்ட தீர்மானத்தில், நம்முடைய மாற்றுத் தீர்மானத்திலிருந்து பல பகுதிகளை தி. மு க. அரசு ஏற்றுக்கொண்டு தான் கொண்டுவந்த தீர்மானத்தைத் திருத்தியபோதிலும், நாம் உறுதியாக நம் தீர்மானத்தை வற்புறுத்தினோம்.

(70) பிறகு சென்ற மாநாடு நடந்துகொண்டிருந்த சமயத்தில் நாகர்கோவில் பாராளுமன்ற உபதேர்தல் வந்தது. தி மு க. ஆதரவளித்து நிறுத்திய சுதந்திராக்கட்சி அபேட்சகரை ஆதரிக்குமாறு நம் மீது மிகப்பெரிய நிர்ப்பந்தங்கள் கொண்டுவரப்பட்டன. நாம் அதற்குப் பணிய மறுத்து, நம்முடைய சுயேச்சை அபேட்சகரை நிறுத்துவது என்ற முடிவை அம்மாநாட்டிலேயே எடுத்தோம். இரண்டு பகாசுர சக்திகளுக்கிடையே நாம் நின்றதன் காரணத்தால் நமக்குக் கணிசமான வோட்டுகள் கிடைக்கவில்லை என்பது உண்மை ஆயினும் அந்தத் தேர்தலில் உண்மையான அரசியல் கொள்கைப் பிரச்சாரம் நடத்தியது நமது கட்சியே என்று பூர்ஷுவாப் பத்திரிகைகள்கூட ஏற்றுக்கொண்டன. அந்த மாவட்டத்தில் பிற்காலத்தில் கட்சியின் வளர்ச்சிக்கும், இயக்க வளர்ச்சிக்கும் அது உதவியாக இருந்தது என்பதில் சந்தேகமில்லை.

(71) அந்தக் காலகட்டத்தில்தான் கீழத் தஞ்சையில் தி தொ. கோபாலகிருஷ்ணநாயுடுவும், அவர்களின் அடியாட்களும் பெருநிலக் கிழார்களைக் காக்க உதவியவர்களும், மறைமுகமான போலீஸ் முஸ்தீப்புகளும் போலீஸின் மறைமுக உதவியுடன் நம் தோழர்கள் மிராசுதார்களின் குண்டர்களால் தாக்கப்படுவதும் பெரும் அளவு வளர்ந்துகொண்டிருந்தது. இதைப் பற்றி. தோழர் பி. ராமமூர்த்தி பத்திரிகை நிருபர்கள் மாநாட்டில் எச்சரிக்கை செய்ததையும் புறக்கணித்து, இப்படிப்பட்ட தாக்குதல் வெண்மணி கிராமத்தில் நடக்க திட்டம் உள்ளது என்று தஞ்சைத் தோழர்கள் எச்சரிக்கை விட்டதையும் புறக்கணித்து, இக்கொடிய சம்பவத்துக்கு போலீஸ் உதவியது. இச்சம்பவம் தமிழ்நாட்டு மக்கள் பூராவையும் உலுக்கியது எனக் கூறலாம்.

அதையொட்டி கீழத்தஞ்சை பூராவிலும் 144 தடை யுத்தரவை சர்க்கார் பிறப்பித்தது ஆயினும் தடை யுத்தரவை மீறி பல கிராமங்களில் கண்டனக் கூட்டங்கள் நடந்தன. திருவாரூரில் ஏற்பாடு செய்த பிரும்மாண்டமான கண்டனக் கூட்டத்தை, தடை யுத்தரவை மீறி நடத்தியே தீருவோம் என்று நாம் உறுதியாக அறிவித்த பிறகுதான் சர்க்கார், அந்தக் கூட்டத்தை நடத்துவதற்கு அனுமதி வழங்கியது. இந்தச் சம்பவத்தை யொட்டிய கண்டன இயக்கம் தமிழக முழுவதும் நாம் நடத்தியதில், கோவையில் நமது தலைமையிலுள்ள தொழிலாளர்கள் வேலைநிறுத்தம் செய்தது குறிப்பிடத்தக்கது

72) குடியேற்றத்தில் நடந்த மாநிலக் கமிட்டிக் கூட்டத்திலேயே தி. மு. க ஆட்சி கடைப் பிடிக்கும் தொழிலாளர் கொள்கையைப்பற்றி விமர்சித்தோம்.

73) பிறகு, கோவையில் தொழிற்சங்க ஒற்றுமை மாநாட்டை நாம் கூட்டிய போது, அக்கூட்டத்தில் தி. மு. க அரசின் தொழிலா

னரி கொள்கையை மேலும் ஸ்தூலமாக விமர்சித்து, அந்தத் தீர்மானத்தை ஒரு பிரசுரமாகக் கொண்டு வந்து, அதனடிப்படையில் தமிழகம் பூராவும் கூட்டங்களின் மூலம் அம்பலப்படுத்துவதற்கு முயற்சி செய்தோம்.

74) அதே போன்று, திண்டுக்கல்லில் நடந்த விவசாய சங்க மாநாட்டில், தி. மு. க சர்க்காரின் விவசாயிகள்பால் அனுஷ்டிக்கும் கொள்கைகளை அம்பலப்படுத்தும் தீர்மானம் நிறைவேற்றப்பட்டது. அந்தத் தீர்மானத்தின் அடிப்படையில் நமது பிரச்சாரத்தை தமிழக மெங்கும் செய்வதற்கு முயற்சி செய்தோம்.

75) இவைகளெல்லாம் நடந்த பிறகும், தி. மு. க. சர்க்காரின் கொள்கை மேலும் மேலும் ஜன விரோதமாகப் போய்க்கொண்டிருந்ததை முன்னிட்டு, புதுக்கோட்டையில் கூடிய மாநிலக் கமிட்டிக் கூட்டத்தில் இந்த அரசின் கொள்கைகளை முழுமையாகவும் ஸ்தூலமாகவும் விமர்சித்து, இக்கொள்கைகளை மாற்றிக் கொள்ளாவிடில் அடுத்து வரவிருந்த சட்ட சபை உப தேர்தல்களில் அந்தக் கட்சிக்கு ஆதரவு அளிக்க இயலாது என்று திட்டவட்டமாக அறிவித்தோம்.

76) இதற்குப் பிறகு நகராட்சி மன்றங்களின் தேர்தல்கள் வந்தபோது, இந்திரா காங்கிரஸ் உள்ளிட்ட தேர்தல்அணி உருவாக்கும் முயற்சியில் நாம் கலந்து கொள்ள முடியாது என்று திட்டவட்டமாக அறிவித்துவிட்டோம்.

77) அதன் பிறகு சில மாதங்களில் திடீரென்று பார்லிமெண்டு கலைக்கப்பட்டு, பார்லிமெண்டுக்கும், சட்ட சபைக்கும் பொதுத் தேர்தல்கள் நடந்தபோது, அந்த கூட்டணி அமைக்கப்பட்டது. முற்போக்குக் கூட்டணி என்ற பேரால் அதில் நம்மையும் வந்து சேருமாறு பகிரங்கமாக மதுரைப் பொதுக்கூட்டத்தில் திரு. கருணாநிதி அழைத்தார்.

நாம் உறுதியாக, இக்கூட்டணியை முற்போக்குக் கூட்டணி என்று கூறமுடியாது என்றுகூறி, அதில் சேர மறுத்தோம். அதன் விளைவாக நாம் தனித்து நின்று போட்டியிட வேண்டிவந்தது. இதனால் நமக்குத் தோல்வி ஏற்படும் என்றுதான் மாநிலக் கமிட்டி கணித்தது. ஆயினும் சில ஸ்தானங்களுக்காக நாம் நம் கொள்கையை விட்டுக் கொடுக்கத் தயாராக இல்லை. இந்த முடிவை எடுப்பதில் மாநிலக் குழுவில் எந்தவிதத் தயக்கமும் ஏற்படவில்லை. கட்சி அணிகள் பூராவிலும் இந்த முடிவுக்கு உற்சாகமான வரவேற்புதான் இருந்தது.

(78) காவிரியாற்றுத் தண்ணீர் பங்கீடு சம்பந்தமாக தமிழ் மக்களுக்கும் கர்நாடக, கேரள மக்களுக்கும் இடையே பகைமையை வளர்க்கும் வகையில் தி. மு. க. எல்லாக் கட்சிகளையும் திரட்டி பிரச்சாரத்தைக் கிளப்பிவிட்டு, அந்த அணியில் நம்மை அழைத்தபோது அதை ஏற்க மறுத்தது மட்டுமல்ல, உறுதியாக இம்மக்களுக்கிடையே ஒற்றுமையை வளர்ப்பதற்கான வகையில் சிறிதும் தயக்கமின்றிப் பிரச்சாரம் செய்தோம்.

(79) சட்டசபையிலும் நமது நடவடிக்கைகள் தி. மு. க. நேசக் கட்சி என்ற பார்வையில் நமது தனிக் கொள்கையை விட்டுவிடுவதாக இல்லை.

போலீஸின் அடக்குமுறையாகிலும் சரி, நிலச்சீர்திருத்தமாகிலும் சரி, வெண்மணிப் படுகொலை சம்பந்தமான கண்டனமாகிலும் சரி, மற்றும் மக்கள் பிரச்சினைகள் சம்பந்தமாகவும் நாம் உறுதியாகக் குரலை எழுப்பினோம்.

(80) இப்படிச் சொல்வதனால், நமது நடைமுறையில் சறுக்கலும் வழுக்கலும் இருந்ததில்லை என்று கூறவில்லை. இருவிதப் போக்குகளும் கட்சியில் காணப்பட்டன. ஒரு பக்கத்தில், ஆரம்பத்திலிருந்தே மக்களின் உணர்வு மட்டத்தைக் கணக்கிலெடுக்காமல், தி மு க. எதிர்ப்புப் பிரச்சாரப் போக்கும் இருந்தது. மறுபுறத்தில் அதன் ஜனவிரோதப்போக்குகளை உறுதியாக விமர்சிக்கத் தயக்கம் காட்டும் போக்கும் இருந்தது. மாநில சட்டசபையில் ஆட்டோமேஷனை புகுத்தக்கூடாது என்று நாம் கொண்டுவந்த தீர்மானத்தை, தி. மு. க. சர்க்கார் கொள்கையளவில் ஆதரிப்பதாகக்கூறி வாபஸ்வாங்கக்கூறிய போது அதை நாம் வாபஸ் வாங்கியதும், துயர்துடைப்பு மசோதாவை நம்முடைய கடுமையான எதிர்ப்பை நிராகரித்து நிறைவேற்றிய சமயத்தில் நாம் வெளிநடப்பு செய்யாதிருந்ததும் இதற்கு உதாரணங்கள். கொள்கையளவில் ஆட்டோமேஷனை எதிர்ப்பதாகக்கூறிய சர்க்கார் ஓரிரு மாதங்களுக்குப் பிறகு தென் பிராந்திய ரயில்வே தலைமைக் காரியாலத்தில் அதைப் புகுத்துவதற்கு போலீஸ் உதவியளித்தது. தி மு. க சர்க்காரின் கொள்கைப் பிரகடனத்திற்கும் நடைமுறைக்கும் உள்ள வித்தியாசத்திற்கோர் எடுத்துக்காட்டு.

முனிசிபல் தேர்தல்களிலும், பஞ்சாயத்துத் தேர்தல்களிலும் சிற்சில இடங்களில் இத்தகைய சறுக்கல்கள் ஏற்பட்டன.

81) மாநிலக் குழுவிலும் தி. மு. க. சர்க்கார் சம்பந்தமாக கடுமையான விவாதங்களுக்குப் பிறகே முடிவுகள் எடுக்கப்பட்டன. அதனால், விவாதங்களுக்குப்பிறகு எடுக்கப்பட்ட முடிவுகள் சரியான முடிவுகள் என்பதை நிகழ்ச்சிப் போக்குகள் ஊர்ஜிதப்படுத்துகின்றன.

82) இந்தக்காலகட்டத்தில் வெகுஜன இயக்கத்தில் நிச்சயமாக நாம் முன்னேறியுள்ளோம்.

தொழிலாளர் இயக்கம் சம்பந்தப்பட்ட வரையில், கோவையில் எண்ணற்ற போராட்டங்களை நடத்தியுள்ளோம். சென்னையைச் சுற்றியுள்ள தொழிற்பேட்டையிலும் தொழிற்சாலைகளிலும் ஓரளவு நமது தொழிற்சங்கங்கள் விஸ்தரித்துள்ளன. பல போராட்டங்களும் ஒப்பந்தங்களும் ஏற்பட்டன. தென் ஆற்காடு மாவட்டத்தில், நெய்வேலியில் கணிசமான முன்னேற்றம் கண்டோம். வடலூர் தொழிற்சங்கப்போராட்டம் பல மாதங்கள் நடைபெற்று, இறுதியில் உடன்பாடு காணப்பட்டது. அதே போன்று நெல்லிக்குப்பத்

தில் பாரி கம்பெனி தொழிற்சங்கம் நமது கைக்கு வந்து, 3 மாதங்களுக்கு மேல் வேலை நிறுத்தம் நடந்து சமரசம் கண்டது. புதுச்சேரியில் ரோடியர் மில்லில், அங்கீகரிக்கப்பட்ட ஏ. ஐ. டி. யூ. சி யின் துரோகத்தை எதிர்த்து போனசுக்காகப் போராடி, நமது செல்வாக்கு வளர்ந்து, மேலும் மீண்டும் போராட்டங்களை வளர்த்ததின் விளைவாக, இன்று அந்த மில்லில் நாம்தான் பிரதான சக்தியாக விளங்குகிறோம்.

(83) திருச்சியில் அநேகமாக எல்லாத் தொழிற்சாலைகளிலும் நமது சங்கம்தான் பிரதான சக்தியாக விளங்குகிறது,

(84) வடஆற்காட்டில் பீடித்தொழிலாளர்களின் போராட்டம் இருமுறை நடத்தி, இறுதியில் கூலி உயர்வு ஒப்பந்தத்தைச் செய்யவேண்டிய நிலைமையை உண்டாக்கினோம்.

(85) மதுரையில் ஹார்வி மில்லில் எண்ணற்ற டிபார்ட்மெண்டு போராட்டங்களை ஊக்குவித்து, அவைகளில் வெற்றிகண்டிருக்கிறோம்.

(86) சேலத்தில் மேட்டூர், பள்ளிப்பாளையம் பேப்பர் மில்ஸ், சேலம் மாக்னிசைட், ராஜேந்திரா மில், முதலிய பல தொழிற்சாலைகளில் நமது போராட்டங்கள் வெற்றியடைந்திருக்கின்றன.

(87) குமரி மாவட்டத்தில் நமது தொழிற்சங்க இயக்கம் அங்குள்ள ரப்பர் தோட்டங்களிலும். ஸ்டேட் டிரான்ஸ்போர்ட்டிலும், பஞ்சாலையிலும் விஸ்தரித்துள்ளது. பல போராட்டங்கள் நடத்தியுள்ளோம்.

(88) மதுரையில், பஞ்சாலைகளில் நமது சங்கத்தின் பலம் விஸ்தரித்து, பல போராட்டங்களுக்குக் காரணமாயிருந்திருக்கிறது.

(89) இவைகளைத்தவிர, மின்சார ஊழியர்கள், ஸ்டேட் டிரான்ஸ்போர்ட், பல மாவட்டங்களில் தனியார் துறையில் நடத்தப்படும் பஸ் டிரான்ஸ்போர்ட் ஆகியவைகளில் நமது சங்கம் பலப்பட்டு, பிரதான சக்தியாக விளங்குகிறது. மேலும் கைநெசவுத் தொழிலாளர்கள் போராட்டங்கள் பல நம்மால மதுரையிலும், இராமநாதபுரம். திருநெல்வேலி, தஞ்சை, குமரி மாவட்டங்களிலும் நடைபெற்றிருக்கின்றன.

(90) இது ஒரு தொழிற்சங்க ரிப்போர்ட்டு அல்ல. அதனால் எல்லாப்போராட்டங்களையும் விவரிப்பது இதில் இயலாது. ஆனால் ஒரு முக்கியமான அம்சத்தை இங்குக் குறிப்பிட்டாகவேண்டும். இந்தப் போராட்டங்களில், தி. மு. க. வை ஆதரிக்கும் தொழிலாளர்கள் கலந்துகொண்டது தான் அது. மேலும் பலஇடங்களில் நம்முன்முயற்சியின் காரணமாய் சகலசங்கங்களையும் சேர்ந்த தொழிலாளிகள் கூட்டாகப் போராட்டங்களில் ஈடுபட்டுள்ளனர்,

(91) விவசாய இயக்கம் சம்பந்தப்பட்டமட்டில், கீழத்தஞ்சை யில் போராட்டங்களோடுதவிர, 1969 திண்டுக்கல்லில் நடந்த மாநாட்டில் நிலச்சீர்திருத்தப் பிரச்சாரத்திற்காக பாதயாத் திரைகள் நடத்துவது என்று முடிவு எடுக்கப்பட்டது. அதை நிறை வேற்றும் முறையில் தஞ்சை, மதுரை, வட ஆற்காடு, சேலம், நெல்லை இராமநாதபுரம், திருச்சி, குமரி மாவட்டங்களில் பாத யாத்திரை கள் நடைபெற்றன.

(92) இதற்குப்பிறகு சென்னையில் விவசாயப் பேரணி நடத்தி னோம். பல்வேறு மாவட்டங்களிலிருந்து 30.000 க்கு மேற்பட்ட விவ சாயிகள் அதில் கலந்துகொண்டனர். நகர் தொழிலாளிமக்களும் சேர்ந்து 50.000 மக்கள் அதில் கலந்துகொண்டனர்.

(93) இத்தகைய பிரச்சாரக் கிளர்ச்சிக்குப் பிறகுதான் சர்க் கார் உச்சவரம்பு மசோதாவுக்குத் திருத்த மசோதாவையும், இனும் சட்டத்திருத்த மசோதாவையும் கொண்டுவரும்படி நிர்ப்பந்திக்கப் பட்டது. ஆயினும் இச்சட்டங்கள் எப்படி கண்துடைப்புச் சட்டங் களாக, விவசாயிகளுக்கு நிலம் அளிக்கக்கூடியவைகளாக இல்லாம லாக்கப்பட்டன என்பதை ஏற்கனவே சுட்டிக்காட்டியுள்ளோம்.

(94) இதைத் தவிர, மதுரை மாவட்டத்தில் வடமலைக்குண்டு, கொடைக்கானல் பகுதிகளில் சாகுபடி செய்யும் காட்டு நிலங்களை விட்டு வெளியேற்றும் நடவடிக்கைகளைத் தடுத்து நிறுத்துவதற்காக நடந்த இயக்கத்தில் ஓரளவு வெற்றிகண்டது. அதே போன்று குமரி மாவட்டத்திலும் காட்டு நிலங்களிலிருந்து விவசாயிகளை வெளியேற் றுவதைத் தடுக்க இயக்கம் நடத்தினோம்.

இன்னும் பல மாவட்டங்களில் தரிசு நிலங்களை விவசாயக் கூலிகளுக்குப் பட்டா போடுவதற்கான இயக்கத்தில் சிறிது வெற்றி கிடைத்துள்ளது.

(95) ஆயினும் விவசாயி இயக்கம் இங்குமங்கும் சின்னஞ்சிறு திட்டுகளாகத்தான் உள்ளது.

(96) இதே காலகட்டத்தில் மாணவர்களிடையே அசைவு ஏற்பட்டுள்ளதைக் கண்டோம். இதுவரையில் தி. மு. க வையே பரி பூரணமாக ஆதரித்த மாணவர்கள், நடைமுறை அனுபவத்தில் பிரமை நீங்கி நமது கட்சியைப்பற்றி தெரிந்துகொள்ள ஆர்வம்காட்டு கின்றனர். சென்னை, கோவை, மதுரை முதலிய மாவட்டங்களில் எடுத்த முயற்சிகளின் காரணமாய் பல மாணவர்கள் திரட்டப்பட்டு அ. இ. மா. சம்மேளனத்தின் கிளை தமிழ்நாட்டில் அமைப்பது சாத்தி யமாயிற்று. ஆயினும் இந்த முன்னேற்றம் மிகவும் குறைவானதே.

97) மத்தியதர வர்க்கத்தைச் சேர்ந்த ஊழியர்களிடையே யும் இந்தக் காலத்தில் கட்சியின் பால் அனுதாபம் வளர்ந்துள்ளது.

98) இவ்வளவு இருந்தும் தேர்தலில் நமக்கு கிடைத்த வாக்குகள் இவ்வளவு குறைவாக இருந்தது ஏன்? (தேர்தல் குறித்து இங்கு பரிசீலிக்கவில்லை. ஏற்கனவே பி. சி. பரிசீலனை உள்ளது) பிரதான காரணம் நம்முடைய தொழிற் சங்க இயக்கம் வளர்ந்தபோதிலும், தொழிலாளர்களிடையே நம்முடைய அரசியல் சரியாகப் போகாதது—ஒன்று. தஞ்சையில் நமது இயக்கம் விவசாயத் தொழிலாளிகளை மட்டும் அடிப்படையாகக் கொண்டதாயிருக்கிறதேயன்றி, சாகுபடியாளர்களிடமும் சிறு விவசாயிகளிடமும் இயக்கமில்லாதது—இரண்டு.

தேர்தலுக்குப்பின்

(99) தேர்தலில் தோற்ற போதிலும் நமது கட்சி அணிகளிடையே சோர்வு ஏற்படவில்லை. மாறாக புதிய உத்வேகத்துடன் பணியாற்றுகின்றனர்.

தேர்தலுக்குப் பிந்திய கடந்த எட்டு மாத காலத்தில் வளர்ந்து வரும் போராட்டங்களும், இவைகளில் நமது கட்சி வகிக்கும் பாத்திரமும் இதைத் தெள்ளத் தெளிவாக எடுத்துக்காட்டுகின்றன.

(100) சங்ககிரி சிமெண்டு தொழிலாளர் போராட்டம், அதற்கு ஆதரவாக குவாரி தொழிலாளர்கள் வேலை நிறுத்தம் செய்தது, மதுரை ஹார்வி மில்லில் சகல சங்கங்களின் ஐக்கிய கமிட்டி அமைக்கப்பட்டு கிராசூட்டி அதிகரிப்பதற்காக நடந்த போராட்டம், மூடிய மில்களைத் திறப்பதற்காகக் கோவைத் தொழிலாளர்கள் மீண்டும் பொது வேலை நிறுத்தத்துக்கு ஆயத்தமானது, மதுரை, பரமக்குடி—எமனேஸ்வரம், கும்பகோணம், பாபநாசம் முதலிய இடங்களில் பல்லாயிரக்கணக்கான கைநெசவுத் தொழிலாளிகளின் போராட்டம், சென்னை ரப்பர் தொழிற்சாலையில் 93 நாட்கள் நடந்த போராட்டம், போனஸுக்காக கோவையில் நடந்த பஞ்சாலைத் தொழிலாளிகளின் போராட்டம், மதுரையைச் சுற்றியுள்ள மில்களில் சமீபத்தில் நடந்த வேலை நிறுத்தங்கள், குமரி மாவட்டத்தில் நடந்த கைநெசவுத் தொழிலாளர் போராட்டம், சென்னையில் டெலிபிரிண்டர் பாக்டரியில் நடந்தபோராட்டம், சேலம் மாக்னிசைட்தொழிலாளர்கள் போராட்டம், வடஆற்காடு மாவட்டத்தில் 40,000 பீடித் தொழிலாளர்கள் போராட்ட முஸ்தீபு. இன்னும் சென்னையைச் சுற்றியுள்ள பல போராட்டங்கள் இவையெல்லாம் தொழிற்சங்க இயக்கத்தின் வளர்ச்சியைக் காட்டுகின்றன.

(101) இந்தப் போராட்டங்களெல்லாம் கடும் அடக்குமுறையின் நடுவே நடந்தவையாகும். தேர்தலுக்குப் பிந்திய காலத்தில் ஏற்பட்ட விலைவாசி உயர்வு, வேலையில்லாத் திண்டாட்டம் ஆகியவற்றினால் தேர்தல் காலத்தில் ஏற்பட்ட பிரமைகள் நீங்க ஆரம்பித்துள்ளதையும் இது எடுத்துக்காட்டுகிறது.

(102) அதேபோன்று, தஞ்சை மாவட்டத்தில் நமது விவசாய இயக்கம் மேலத் தஞ்சையிலுள்ள பாபநாசம், கும்பகோணம் தாலுக்

கார்களுக்கும் இதே காலகட்டத்தில் ஓரளவு பரவ ஆரம்பித்திருக்கிறது. செங்கல்பட்டு மாவட்டத்தில் பொன்னேரி தாலுக்காவிலும் விவசாய இயக்கம் சிறிது பரவியுள்ளது.

(103) மாணவர் அரங்கத்தில், இரண்டாண்டுகளுக்கு முன் நக்சலைட் சீர்குலைவு வேலைகளினால் ஏற்பட்ட தேக்கநிலை சிறிது நீங்கி, சென்னை நகரில் ஓரளவு வளர்ச்சி ஏற்பட்டுள்ளது. அண்ணாமலைப் பல்கலைக் கழகத்தில் நடந்த போலீஸ் கொடுமையைப் பற்றி நாடெங்கும் கண்டன இயக்கம் நடத்தப்பட்டது. சென்னையில் இரண்டு கல்லூரிகளில் கண்டன வேலைநிறுத்தமும் நடைபெற்றிருக்கிறது. இது சம்பந்தமாக நிறுவப்பட்டுள்ள விசாரணையில் இ. மா. சம்மேளனத்தின் தமிழ்நாடு கிளை பங்கெடுத்துக்கொண்டிருப்பதன் மூலம், மேலும் அது தமிழ்நாட்டு மாணவர்களிடையே அறிமுகப்படுத்தப்பட்டு வருகிறது.

(104) இந்தப் போராட்டங்கள் அனைத்திலும் உள்ள முக்கியமான அம்சம் என்னவெனில், தி. மு. க. தலைமையும், அதன் தொழிற் சங்கங்களும் எதிர்த்தபோதிலும், தி. மு. க. வைச் சேர்ந்த தொழிலாளிகளும் உறுதியாக நின்று போராடியிருக்கின்றனர். சில இடங்களில் தி. மு. க. சங்கமும் நமது சங்கத்தோடு சேர்ந்து நின்று போராட வேண்டிய நிர்ப்பந்தம் அந்த சங்கத் தலைமைக்கு ஏற்பட்டிருக்கிறது. ஏ. ஐ. டி. யூ. சி சங்கங்களும், இதே மாதிரி நிர்ப்பந்திக்கப்பட்டிருக்கின்றன. கோவையில் நடந்த போனஸ் வேலைநிறுத்தத்தில் எச். எம். எஸ். ஐ. என். டி. யூ. சி, தி. மு. க. சங்கங்கள் போனஸ் ஒப்பந்தத்தில் கையெழுத்துப் போட்டபோதிலும், நமது முயற்சியினால் அந்தத் தலைமைகளை மீறி, அச்சங்கங்களைச் சேர்ந்த தொழிலாளிகள் பல ஆயிரக்கணக்கில் பங்கெடுத்துக் கொண்டனர். அதேபோன்று சென்னை ரப்பர் பாக்டரி தொழிற்சாலையில் நடந்த வேலைநிறுத்தத்தை உடைக்க தி. மு. க. தலைவர்களும். எம். எல் ஏயும் எவ்வளவு முயற்சிகள் செய்தும் அந்தத் தி. மு. க. தொழிலாளிகள் அதற்குச் சம்மதிக்கவில்லை.

(105) இவைகளெல்லாம் எதைக் காட்டுகின்றன? நமது கட்சியின் தொழிற் சங்க இயக்கம் சம்பந்தமாக நாம் அனுஷ்டிக்க வேண்டிய ஒற்றுமை கொள்கை, கீழிருந்து ஒற்றுமையைக் கட்ட வேண்டும் என்ற நடைமுறையை நாம் சரியாகக் கடைப்பிடிப்போமாயின், தொழிலாளிகளின் உணர்வு மட்டத்தைக் கணக்கிலெடுத்துக் கொண்டு சரியாக முன்வைப்போமாயின், திரிபுவாதிகள், சீர்குலைவு வாதிகள் ஆகியோரின் சாகசங்களை முறியடித்து ஒன்றுபட்ட போராட்டங்களை வளர்க்கமுடியும் என்பதைத் தெளிவாகக் காட்டுகின்றன. இந்த முறையில் சரியாக நமது கட்சிக் கோட்பாடுகளைக் கடைப்பிடித்து இந்த ஒற்றுமையைக் கட்டிவளர்த்த நமது தோழர்கள் போற்றப்பட வேண்டியவர்கள்.

(106) நீலகிரி மாவட்டத்தில் விவசாயிகளை நிலத்திலிருந்து வெளியேற்றுவதற்கு சர்க்கார் நடவடிக்கை எடுத்ததை எதிர்த்து, சர்வகட்சி மக்களையும் ஒன்றுபடுத்தித் தொடர்ந்து போராடியதன்

விளைவாக, அந்த வெளியேற்றம் தற்காலிகமாக நிறுத்திவைக்கப் பட்டுள்ளது. அப்பிரச்சனைக்குத் தீர்வுகாண பேச்சுவார்த்தைகள் நடத்த அரசு சம்மதித்திருக்கிறது

(107) தேர்தலுக்குச் சில மாதங்களுக்குப்பிறகு மே மாதத்தில் கோவையில் நடந்த சி. ஐ. டி. யூ வின் பொதுக்குழுக் கூட்டத்தை யொட்டித் திரட்டிய அணிவகுப்பும், ஜூன் மாதத்தில் மதுரையில் சி. ஐ. டி. யூ வின் தமிழ் மாநில ஆண்டு மாநாடும் அதையொட்டிய அணிவகுப்பும், சிதம்பரத்தில் நடந்த தமிழ் மாநில விவசாய சங்க மாநாடும், கொட்டும் மழையிலும் நடந்த அணிவகுப்பும், தேர்தலுக்குப் பிறகு ஏற்பட்டுள்ள வளர்ச்சிக்கு எடுத்துக்காட்டாக உள்ளன.

(108) இவ்வாறு போராட்டங்கள் வளர்வதைக் கண்டு தி மு க. அரசு மேலும் அசுரத்தனமான அடக்குமுறையைக்கட்டவிழ்த்து விடுகிறது. பள்ளிபாளையம் நெசவாளர்கள் மீது ஏவப்பட்ட கொடுமையான அடக்குமுறை, சங்ககிரி சிமெண்டு தொழிற்சாலையில் நடந்த வேலை நிறுத்தத்தில் 700 பேருக்கு மேல் கைது செய்தது, அண்ணாமலை சர்வகலாசாலையில் நடந்த அரசு அடக்குமுறை இவைகளெல்லாம் இதற்குச் சான்றுகளாகும்.

(109) மேலும் இந்தப் போராட்டங்களை வளர்ப்பதற்கு நாம் தான் பிரதானக் காரணம் என்பதைப் பார்க்கும்போது நமது கட்சியையே பிரதான இலக்காகக்கொண்டு அரசு தாக்குகிறது. "நக்சல்பாரிகள்" என்று சில நாட்கள் நம்மைப்பற்றி அவதூறு பிரச்சாரம் செய்தார், திரு. கருணாநிதி. தன்னைக்கொல்லச் சதி செய்ததாகவும், அதற்காக கொடமுருட்டி யாற்றின் பாலத்தினடியில் வெடிகுண்டுகள் வைக்கப்பட்டிருந்ததாயும் புரளியைக் கிளப்பி விட்டார். தஞ்சையிலும், நெல்லை மாவட்டத்திலும், குமரி மாவட்டத்திலும் நமது தோழர்களின் மீது எண்ணற்ற பொய் வழக்குகள் போடப்பட்டு அத்தோழர்கள் சிறையிலடைபட்டுக் கிடக்கின்றனர். கடைசியாக, நம் தோழர்கள் வி. பி. சிண்டன், ஹரிபட், பரமேஸ்வரன் ஆகியோரையும், தொழிற்சங்கத் தலைவர் குசேலரையும் பாதுகாப்புச் சட்டத்தை—எந்தப் பாதுகாப்புச் சட்டத்தை தி. மு. க. பாராளுமன்றத்தில் எதிர்த்து வெளிநடப்பு நடத்தியதோ—அதே சட்டத்தை கூச்சம் இன்றி விசாரணையின்றி சிறையிலடைக்கப் பயன்படுத்தினர் பிறகு தமிழ் நாடு பூராவும் நடந்த கண்டன இயக்கத்தின் பயனாகவும், ஹைகோர்ட்டில் வழக்காடுகையில் ஏற்பட்ட நிலைமையின் காரணமாகவும் அவர்களை விடுதலை செய்ய வேண்டி வந்தது.

(110) இப்பொழுது மற்ற சங்கங்களைக் கைப்பற்ற போலீஸின் பாதுகாப்பில் குண்டர்களை ஏவி விட்டு, நமது தோழர்களையும், தொழிலாளிகளையும் தாக்கும் நடவடிக்கைகள் ஆரம்பிக்கப்பட்டிருக்கின்றன. ஆழியார், கிவென் மார்க்கள், சென்னை சிம்ப்ஸன் முதலியவை இதற்கு உதாரணங்கள்.

(110-அ) தி. மு. க. தலைமையில் சில விரிசல்கள் தோன்ற ஆரம்பித்துள்ளன.

(111) தோழர்களே!

எதிர்காலத்தில் நமது கட்சிக்கும் ஜனநாயக இயக்கத்திற்கும் வேகமாக வளர்வதற்கான வாய்ப்புகள் உள்ளன. காரணம் வெளி நாட்டு உதவியை நம்பி, ஏகபோக முதலாளிகளை வளர்த்து, நிலப் பிரபுக்களை வளர்த்து, நாட்டின் பொருளாதாரத்தை வளர்ப்பது என்பது இயலாத காரியம் என்பதைக் கடந்த 23 ஆண்டுகால முயற்சிகளும், அதன் விளைவுகளும் தெளிவாக்கிவிட்டன. இதனால் மேலும் நெருக்கடி வளரத்தான் செய்யும். மக்கள் நிலையில் சுமைகள் அதிகரிக்கத்தான் செய்யும். ஆனால், இந்திரா காந்தி சர்க்கார், வலதுசாரிக் கம்யூனிஸ்டுக் கட்சி அதை முற்போக்கு சர்க்கார் என்று வருணித்த போதிலும். இந்த அடிப்படைக் கொள்கையைக் கைவிடாது. காரணம், அதில் சில முற்போக்கு எண்ணம் கொண்டவர்கள் இருந்த போதிலும், அதன் தலைமை இந்தியப் பெருமுதலாளிகளுடைய நலன்களைப் பாதுகாக்கக்கூடிய தலைமை— நிலப்பிரபுக்களை எதிர்த்துத் தாக்க அதற்கு தைரியம் கிடையாது. அதன் அமைப்பே அப்படிப் பட்டது.

(112) பங்களாதேஷ் பிரச்சினையினால் ஏற்பட்டுள்ள அதிகச் செலவைக் காட்டி மேலும் அது விதித்த வரிகள் அனைத்தும் சாதாரண மக்கள் தலையிலேயே விழுகின்றன. பெரும் கம்பெனிகளைத் தொடக்கூட இல்லை. இது இந்த நிர்ணயிப்பை ஊர்ஜிதம் செய்கிறது.

(113) தமிழ்நாட்டிலுள்ள தி மு க. அரசுக்கும் வேறு கொள்கை கிடையாது. இதே குட்டைக்குள் இருந்துகொண்டு தமிழ் மக்களின் பிரச்சினைகளுக்குத் தீர்வு காண்பது எப்படி சாத்தியமாகும்?

(114) எனவே, இவ்வாறு மக்களின் எல்லாப் பகுதி மக்களும் தாக்கப்படக்கூடிய காலத்தில் நம் மக்களுக்கு போராட்ட உணர்ச்சி மேலும் வளரும் என்பதில் சந்தேகமில்லை

(115) இந்நிலையில் ஒன்றுபட்ட போராட்டங்களை வளர்ப்பதற்கான வாய்ப்புகள் மேலும் வளரும். இவைகளை சரியாகப் பயன்படுத்தி, மக்களை ஒன்றுபடுத்துவோமாயின், நிச்சயமாக நமது கட்சி தமிழ்நாட்டில் நிர்ணயமான அரசியல் சக்தியாக வளர்வதற்கான வாய்ப்புகள் நம்முன் உள்ளன.

(116) ஆனால் இந்தப் பணியை ஆற்ற வேண்டுமாயின் கட்சிக்குள் பலவீனங்களைப் போக்கியாக வேண்டும், வாய்ப்புக்களையும் சரிவரப் பயன்படுத்த வேண்டும். இவ்வாறு வளர்வது சுலபமல்ல. எதிர் காலத்தில், வர்க்கப் போராட்டம் வளர வளர, அடக்குமுறையும் கண்மூடித்தனமான கோர உருவமெடுக்கும். இந்திரா அரசு இன்று மேற்கு வங்கத்தில் அரை பாசிஸ ஆட்சியை நடத்தி, நம்மை அழிப்பதற்கு முயற்சி செய்வதே இதற்குச் சான்று.

(117) இது இயற்கையே ஏனெனில், இந்திரா காந்தியின் ஆட்சிக்கு இன்று உறுதியான எதிர்ப்பாளர்கள் நாம்தான் சுதந்திராக் கட்சி ஒரு சக்தியல்ல. அதன்பின் இருக்கும் பெருமுதலாளிகளும், நிலப்பிரபுக்களும் தங்கள் வர்க்க நலன்களைக் காக்கக்கூடிய சாகஸம் புரியக்கூடியது இந்திரா காங்கிரஸ்தான் என்று அதற்குப்

பின் பலமாக இருக்கின்றனர். தேர்தலுக்குப் பிறகு சிண்டிகேட் காங்கிரஸ்—எல்லா மாநிலங்களிலும்—நமது மாநிலம் தவிர—சீரழிந்து வருகிறது. பிரஜா சோஷியலிஸ்டுக் கட்சியும் சம்யுக்த சோஷியலிஸ்டுக் கட்சியும் ஒன்றாக இணைந்தபோதிலும், பி சோக்களின் பெரும் பகுதியினர் இந்திரா காங்கிரசுக்குச் சென்றுவிட்டனர். ச. சோ. கட்சியிலும் ஒரு பகுதி இந்திரா காங்கிரசுடன் இணைந்துவிட்டனர். எஸ்.எஸ்.பி.யுள்ள கட்சியில் கொள்கைக் குழப்பமும், தலைவர்கள் சண்டையும் நிலவுகின்றன. வலதுசாரிக் கம்யூனிஸ்டுக் கட்சியோ, இந்திராகாந்தியின் தயவில் தான் செயல்பட வேண்டிய நிலையிலுள்ளது.

(118) இந்நிலையில் ஆளும் வர்க்கங்களின் கொள்கைகளுக்கும் திட்டங்களுக்கும் மாற்றான புரட்சிகரமான கொள்கைகளையும், திட்டத்தையும் வைத்துப் போராடும் கட்சி மார்க்சிஸ்டுக் கம்யூனிஸ்டு கட்சி ஒன்றுதான். ஆளும் வர்க்கங்களின் கொள்கையின் சூன்யம் மேலும் அம்பலமாக ஆக மக்கள் பிரமை நீங்க ஆளும் வர்க்கங்களுக்கு அறைகூவல் விடக்கூடிய சக்தி நாம்தான் என்பதை அவர்கள் பார்க்கின்றனர். எனவேதான் வர்க்கப்போராட்டம் தீவிரமடையும் போது இதுவரையில் காணாத அடக்குமுறை ஏவி விடப்படும் என்பது திண்ணம்.

(119) தமிழ்நாட்டிலும் அதே நிலைதான் ஏற்படும் என்பதில் சந்தேகமில்லை.

எனவே எத்தகைய அடக்குமுறையையும் சமாளிக்கக் கூடிய கட்சியாக வளர்வது அவசியம்.

இவ்வாறு வளர்வதற்கு என்ன செய்ய வேண்டும்? எந்த பலவீனங்களைக் களைந்தெறிய வேண்டும்?

(120) தமிழ்நாட்டில் நாம் அரசியல் சக்தியாக வளரவேண்டுமானால் நகர்ப்புறங்களிலுள்ள தொழிலாளர்கள் மத்தியில் வேலை செய்தால் மட்டும் போதாது. தொழிலாளி வர்க்கம்தான் ஜனநாயகப் புரட்சிக்குத் தலைமைதாங்க வேண்டும் என்பது உண்மை ஆனால், அது தன் தலைமைப்பாத்திரத்தை வகிக்க வேண்டுமானால் அதன் நெருங்கிய நேச சக்தியாகிய கோடிக்கணக்கான விவசாயத் தொழிலாளிகளையும் ஏழை, நடுத்தர விவசாயிகளையும் அதன் அணியில் திரட்டினால்தான் இந்தப் பாத்திரத்தை வகிக்கமுடியும். தமிழ்நாட்டிலுள்ள மக்களில் 80 சதவிகிதம் கிராமத்தில்தான் வசிக்கின்றனர். இந்த மக்களை விட்டுவிட்டால், நாம் எப்படி ஒரு நிர்ணயமான அரசியல் சக்தியாக வளர்வது இயலும்?

(121) மேலும், நம்மை எதிர்நோக்கியுள்ள கடும் அடக்குமுறையைச் சமாளிக்க வேண்டுமானால், இந்தப் பரந்த சக்தியைத் திரட்டாமல் முடியாது. மேற்கு வங்கத்தில் ஏவி விடப்பட்டுள்ள அரை பாசிச ஆட்சியையும் சமாளித்து நமது இயக்கம் வளர்கிறது என்றால் அதற்குக் காரணம், கல்கத்தாவிலுள்ள தொழிலாளர் இயக்கம் மட்டுமல்ல. அதோடுகூட, தொடர்ந்தாற் போன்றுள்ள ஹௌரா ஹூக்ளி, 24 பர்கானாஸ், பர்த்வான் ஆகிய மாவட்டங்களில் தொழிலாளர்கள் மத்தியிலும் விவசாயிகள், விவசாயத் தொழிலாளர்கள் மத்தியிலும் நாம் ஆழமாக வேரூன்றி நிற்பதுதான்.

(122) எனவே கட்சியின் முன் உள்ள முதற் பெரும் கடமை உடனடியாக விவசாய இயக்கத்தை 4, 5 மாவட்டங்களில் சக்தி வாய்ந்ததாகக் கட்டுவது இதற்கு சாத்தியப்பாடுகள் உள்ளன என்பதை சமீபத்தில் ஆங்காங்கே சிறிது சிறிது வளர்ந்துள்ள இயக்கங்கள் எடுத்துக் காட்டுகின்றன.

(123) விவசாய இயக்கத்தைக் கட்டுவதில், விவசாயத் தொழிலாளர் இயக்கம் அஸ்திவாரம் இதைக் கட்டுவதற்கான உடனடி கோஷங்களையும், வழி முறைகளையும் சிதம்பரத்தில் கூடிய மாநாடு விஸ்தாரமாக விவாதித்து முடிவு செய்துள்ளது, எனவே, அதை மீண்டும் இந்த ரிப்போர்ட்டில் விவரிக்க வேண்டிய அவசிய மில்லை.

(124) ஆயினும் ஒரு விஷயத்தை இங்கு வற்புறுத்தியாக வேண்டும். கிராமப்புறத்தில் விவசாய, விவசாயத் தொழிலாளர்கள் இயக்கத்தைக் கூட்டும்போது, வெறும் பொருளாதாரக் கோரிக்கைகளை மட்டும் எடுத்துக்கொண்டால் போதாது. நிலப் பிரபுத்துவ ஒடுக்கலின் ஒரு முக்கியமான அம்சம் ஜாதி அகந்தையின் கொடுமைகள் அரிஜனங்கள் செருப்புப் போட்டுக்கொண்டு மேல்ஜாதிக்காரர்கள் தெருக்களில் நடக்கக்கூடாது என்பனபோன்ற கொடுமைகள் இன்னும் இருந்துவருகின்றன. இந்தக் கொடுமைகளையும் எதிர்த்துப் போராடியாகவேண்டும். இது நிலப்பிரபுத்துவ எதிர்ப்புப் போராட்டத்தின் இன்றியமையாத, பிரிக்க முடியாத பகுதி என்ற உணர்வு நமக்கு இருக்கவேண்டும்.

(125) கீழத்தஞ்சையிலுள்ள இயக்கத்தை மேலத்தஞ்சைக்கு விஸ்தரிப்பதற்கான முயற்சியோடுகூடவே, நமது இயக்கம் விவசாயத் தொழிலாளர்கள் இயக்கமாக இருக்கும் நிலைமையை மாற்றி சாகுபடியாளர்கள், ஏழை மத்திய விவசாயிகள் அனைவரையும் உள்ளிட்ட இயக்கமாக மாற்றுவதற்காகக் கடுமையாக உழைக்கவேண்டும்.

(126) சுருங்கக் கூறினால், அடுத்த காலகட்டத்தில் விவசாய இயக்கத்தை பலமாகக் கட்டுவதில் கட்சி பிரதான கவனம் செலுத்தியாக வேண்டும். அதற்கு வேண்டிய ஸ்தாபன உத்திரவாதம் ஜில்லாக் கமிட்டிகளாலும், மாநிலக்கமிட்டியாலும் ஏற்படுத்தப்பட வேண்டும். இது தமிழ் நாட்டில் கட்சிக்கு முன்னுள்ள தலையாய கடமை.

(127) தொழிற்சங்க அரங்கில், ஏற்கனவே நாம் கடைப்பிடித்துள்ள ஐக்கிய முன்னணிக் கொள்கையின் மூலம் முன்னேற்றம் கண்டிருக்கிறோம் இந்த நடைமுறையை மேலும் உறுதியாகக்கடைப்பிடித்து முன்னேற வேண்டும். நமது கவனம், கேந்திர முக்கியத்துவம் உள்ள தொழில்களில் மிகவும் குறைவு அவைகளில் நாம் சக்தியாக வளராமல் சென்னை நகரத்தில் நாம் முக்கியமானதோர் சக்தியாக வளரமுடியாது.

P. ... - ... - ...

(128) இரண்டாவதாக, தொழிற்சங்கப் போராட்டங்கள் கடுமையான அடக்குமுறைக்கு உள்ளாகும்போது, சகோதரத் தொழிலாளிகள் அடக்குமுறைக்கு எதிராகத் திரட்டப்பட்டால்தான் அதை எதிர்த்து உறுதியாகப் போராட்டங்களை நடத்துவது சாத்தியம். சென்னை ரப்பர் தொழிற்சாலையில் போராட்டம் நடந்த காலத்தில், 50,000 தொழிலாளர்கள் அனுதாப வேலைநிறுத்தத்தில் இறங்கி, 10.000க்கு மேற்பட்டவர்கள் நகரத்தில் ஆர்ப்பாட்டம் செய்தது, அந்தப் போராட்டம் இறுதியில் வெற்றியடைந்ததற்கு முக்கியமானதோர் காரணம். அதுபோன்று தோழர்கள் சிங்டன் முதலானோர் சிறைப்படுத்தப்பட்டவுடன் கோவைத் தொழிலாளர்கள் கண்டன வேலைநிறுத்தம் செய்தது குறிப்பிடத்தக்கது. அடக்குமுறைக்கு எதிராக இத்தகைய நடவடிக்கைகளில் சகோதரத் தொழிலாளிகள் ஈடுபடும்படியான உணர்வை தொழிலாளர்கள் மத்தியில் உண்டாக்கு வது இன்றியமையாதது.

(129) மாணவர்கள் மத்தியில் அதிருப்தி வளர்வது நிச்சயம். ஆனால், நாம் வெகுவேகமாக அவர்களிடையே நம்முடைய அரசியலைக் கொண்டுபோவதற்கு ஏற்பாடு செய்யாவிடில், அவர்கள் சிண்டிகேட் காங்கிரஸ் பக்கம் இழுக்கப்படுவார்கள். எனவே, எல்லா மாவட்டங்களிலும் மாணவர்களிடமும், மத்தியதர ஊழியர்களிடமும், வேலைகளை விரிவாக்குவதற்கு விசேஷ கவனத்தைச் செலுத்தியாக வேண்டும். இந்த அரங்கங்களில் நமது திட்டமிட்ட முயற்சிகள் மிகவும் குறைவானவை.

(130) கம்யூனிஸ்டு இயக்கம், வெறும் பொருளாதாரக் கோரிக்கைக்காகப் போராடுவதன்மூலம் வளர்ந்துவிடாது. அந்தப் போராட்டங்களின்மூலம், அதில் ஈடுபடும் மக்களுக்கு அரசியல் போதத்தை உண்டாக்குவதற்குப் பெரிய வசதியும் வாய்ப்பும் உண்டாகின்றன. இந்த வாய்ப்பினைப் பயன்படுத்தாவிடில், போராடும் இம் மக்கள் பல்வேறு பூர்ஷுவா அரசியலுக்கு இரையாவார்கள். இந்தத் துறையில் நமக்கு மிகப்பெரிய குறைபாடு இருந்திருக்கிறது.

(131) நமது அரசியலையும், தத்துவார்த்தத்தையும் மக்களிடம் கொண்டுசெல்வதற்கு மாநிலக் குழு, தேர்தலுக்கும் பல்வேறு கஷ்டங்களுக்குமிடையே தீக்கதிரை நாளிதழாகக் கொணர்ந்திருக்கிறது. இதை பெரும் அளவு மக்களிடம் விற்பனை செய்வதற்கு கடுமையான முயற்சியில் கட்சி அணிகள் பூராவும் ஈடுபட வேண்டும். ''கட்சிப் பத்திரிகை, கட்சியைக் கட்டுவதற்கான, ஸ்தாபன முறையில் வளர்வதற்கான பிரதான ஆயுதம்'' என்று லெனின் கூறியதன் ஆழமான பொருளை ஒவ்வொரு கட்சி யூனிட்டும், அங்கத்தினரும் உணர்ந்தாக வேண்டும்.

(132) நமது பிரச்சாரத்தில் தி. மு. க. தான் நம் கண்முன் நிற்கிறது. எனவே, பிரதேசப் பார்வை மேலோங்கி நிற்கிறது. அகில இந்தியக் கண்ணோட்டம் குறைவாகவேயுள்ளது. இது களைந்தெறியப்பட்டு, இந்திரா காங்கிரஸின் சாகஸங்களை அம்பலப்படுத்தி, அதன் அடிப்படைக் கொள்கைகளை அம்பலப்படுத்தி, இந்தியாவின் வளர்ச்சிக்கு நம்முடைய மாற்றுத்

திட்டத்தைத் தவிர வேறு ஒரு திட்டமும் பயனளிக்காது என்பதைத் தொடர்ச்சியாக விளக்கவேண்டும். இந்தப் பின்னணியில் தி. மு. க. வின் கொள்கைகள் இவர்களுக்கு மாறுபட்டவையல்ல. அதனால் தான் அந்த அரசு அடக்குமுறையையும் ஜனவிரோதக் கொள்கைகளையும், சுரண்டல் கும்பல்களுக்குச் சாதகமான கொள்கைகளையும் கடைப்பிடிக்கிறது என்பதை விளக்கி இந்தக் கொள்கைகளைக் கைவிடும்படி நிர்ப்பந்திக்க வேண்டும் என்று பிரச்சாரம் செய்தால்தான் தி. மு. க. அணிகளுக்குச் சரியான பிரதிபலிப்பு ஏற்படும்.

(133) மேலும் இவ்வாறு அரசியல் தத்துவார்த்தப் பிடிப்பு பலமாக இருந்தால்தான், எவ்வளவு அடக்குமுறையையும் சமாளித்து நிற்கக் கூடிய தியாக உணர்ச்சியும், நெஞ்சுறுதியும் மக்களுக்கு ஏற்படும் என்பதை மனதிலிருத்திக்கொள்ள வேண்டும். சமீபகாலத்தில் நடந்துள்ள தொழிற்சங்கப் போராட்டங்களில் தி மு க. வைப் பின்பற்றும் தொழிலாளர்கள் அதிகமாகப் பங்கெடுத்துக் கொண்டிருக்கிறார்கள். சரியான ஒற்றுமைக் கொள்கையைக் கையாண்டால் அவ்வணிகளிலிருந்து மேலும் மேலும் போராட்டங்களில் பங்கெடுத்துக் கொள்வது சாத்தியம் என்பதை மனதிலிருத்திக்கொண்டு நாம் இந்த அரசியல் கடமையை நிறைவேற்றியாக வேண்டும்

(134) வலதுசாரிக் கம்யூனிஸ்டுக் கட்சியின் தலைமை சம்பந்தப்பட்டமட்டில் அதன் திருத்தல்வாதத்தின் காரணமாய் சிக்கலில் மாட்டிக்கொண்டிருக்கிறது. ஒருபுறத்தில் இந்திராகாந்தி சர்க்காரையும், தமிழ்நாட்டு தி மு. க சர்க்காரையும் முற்போக்கு சர்க்கார்கள் என்று வருணித்து, அவைகளோடு ஒத்துழைத்து, அதே சமயத்தில் அவைகளின் நடைமுறைக் கொள்கைகளும் நடவடிக்கைகளும் மக்களைத் தாக்குவதனால். இவைகளை எதிர்ப்பதற்கும் மக்களைத் திரட்டி போராட்டங்கள் நடத்துவோம் என்று கூறவேண்டி வருகிறது.

இந்த முரணுக்குப்பின் முரணான கொள்கை எப்படி நடைமுறையில் சாத்தியப்படும்? ஆகவே மக்களைத் திரட்டிப் போராடுவது என்பது வெறும் வெத்துவேட்டாகவே இருக்கும். மேலும் இந்திரா காந்தியின் தயவில்லாவிடில் கேரளத்தில் மந்திரிசபையிலிருக்க முடியாது என்ற நிலை இருக்கும்போது, அவர்கள் எப்படி அவர்களுடைய கொள்கைகளுக்கெதிராக மக்களைத் திரட்டிப் போராடுவார்கள்?

(135) இதனால் அவர்களுடைய அணிகளில் பெரிய அதிருப்தி ஏற்பட்டுவருகிறது அந்த அணிகள், திருத்தல்வாதக் கொள்கைகளுக்கு இரையானபோதிலும், வர்க்கப் போராட்டப் பாரம்பரியத்தில் வளர்ந்தவர்கள் என்பதை நாம் மறந்துவிடக்கூடாது. எனவேதான் தமிழ்நாட்டில் சில மாதங்களுக்கு முன் நடந்த அவர்களுடைய கட்சி மாநாட்டில், தலைமை தி. மு க. வுக்கு வால்பிடிக்கிறது என்ற கடுமையான தாக்குதலுக்கு உள்ளானது. இதைச் சமாளிக்க, தி மு. க அரசு தொழிலாளர், விவசாயிகள் போராட்டங்களில் போலீஸை உபயோகிக்கிறது என்று ஒரு தீர்மானத்தைத் தலைமை மாநாட்டில் நிறைவேற்றியது ஆனால் நடைமுறையில் அது ஒன்றும் செய்யாது என்பது நிச்சயம். தலைமை சம்பந்தப்பட்ட மட்டில், “வெகுஜனப் பிரச்சினையில் போராடுவதற்கு நம்மோடு சேரத் தயார், ஆனால் நாம்தான் வர

மறுக்கிறோம்" என்று கூறுவது பச்சைப் பொய் என்பதை சென்றகால நிகழ்ச்சிகள் நிருபித்திருக்கின்றன. பம்பாயில் ஒன்றுபட்ட போராட்டத்திற்கு வர அவர்கள் மறுத்துள்ளனர். மேற்கு வங்கத்திலும் அடக்குமுறைக்கெதிராக ஒன்றுபட்ட போராட்டத்தை நிராகரித்துள்ளனர். அவர்களுடைய தமிழ் மாநில மாநாட்டில் சமர்ப்பிக்கப்பட்ட தொழிற்சங்க ரிப்போர்ட்டில், ஸ்தல நிலைமை என்று சொல்லி அவர்களின் தோழர்கள் நம்மோடு ஒன்றுபட்டுப் போராட்டங்களில் கலந்துகொள்வதைக் கடுமையாக விமர்சித்துள்ளனர்.

(136) எனவே, இக்கட்சியின் தோழர்களின்பாலும், அணிகளின்பாலும் நமக்கு பிரத்தியேக கவனம் இருத்தல் வேண்டும். அவர்கள் தலைமையின் இந்தப் போக்குக்கான அரசியல், தத்துவார்த்த காரணங்களை தொடர்ச்சியாக விளக்கவேண்டும். அதே சமயத்தில் பல்வேறு பிரச்சினைகளில் ஒன்றுபட்ட போராட்டங்களுக்கு அந்தத் தலைமையையும் அணுக வேண்டும்.

(137) தமிழ்நாட்டில் சிண்டிகேட் காங்கிரசுக்குத் தான் காங்கிரஸ் மனோபாவம் கொண்டவர்களிடையே பிடிப்பு உண்டு என்பது உண்மை. அவர்கள் இன்று நாம் பேசுவதைக் கேட்க வருகின்றனர். ஆனால் அவர்களுக்கு ஏற்பட்டுள்ள இந்த உணர்வு தி. மு க, இந்திரா காங்கிரஸ் எதிர்ப்பிலிருந்து எழுகிறதே யன்றி, ஒரு சரியான ஜனநாயகப் பாதைக்கான உணர்விலிருந்து அல்ல. ஆயினும் அவர்களில் பெரும்பான்மையோர் ஜனநாயக அணியில் திரட்டப்பட வேண்டியவர்கள்.

எனவே, அவர்களுக்கு சிண்டிகேட் காங்கிரசின் தன்மையை எடுத்து விளக்குவதில் நாம் தயக்கம் காட்டக்கூடாது. காமராஜர் தி. மு. க வின் லஞ்ச ஊழலை எதிர்த்துப் பிரச்சாரம் செய்வாரே ஒழிய மேல்தட்டு வர்க்கங்களை பாதிக்கும் பிரச்சினைகளில் தி. மு க. வைத் தாக்கமாட்டார். வெண்மணியில் நடந்த கொடுமையின் போது அந்தக் கட்சி யார் பக்கம் நின்றது?

(138) தேர்தலில் தோற்ற பிறகு, அப்பட்டமான சுதந்திரா கோஷங்களைக் கைவிட்ட போதிலும், இந்திரா காங்கிரஸ் கொள்கைக்கு மாறான கொள்கையோ திட்டமோ அதற்குக் கிடையாது. இதனால் அக் கட்சியைச் சேர்ந்த மக்களிடையே சோர்வு ஏற்பட்டு வருகிறது ஒரு சிறு பகுதி இந்திரா காங்கிரஸ் பக்கம் போகிறது.

(139) எனவே இந்தத்தலைமையின் போக்கையும், கொள்கைகளையும் அம்பலப்படுத்தி நம்முடைய மாற்று ஜனநாயகக் கொள்கைகாக அவர்களை அணுகுவது அவசியமானது. நம்முடைய பிரச்சாரத்தில் தமிழ் நாட்டிலுள்ள இந்தப் பிரத்தியேக நிலையைக் கட்டாயம் கணக்கிலெடுத்துக் கொள்ள வேண்டும்.

(140) நமது பிரச்சாரத்தைச் செய்வதற்கு, கலைத்துறையிலும் நாம் கவனம் செலுத்தியாகவேண்டும். சமீபத்தில் சில தோழர்களின் முன் முயற்சியால் சில மாவட்டங்களில் சில கலைக் குழுக்கள் தோன்றியுள்ளன.

இம்முயற்சிகளை ஊக்குவித்து, எல்லா மாவட்டங்களிலும் இத்தகைய குழுக்கள் அதிகமாக ஏற்படும்படி செய்து நமது அரசியல் தத்துவார்த்தப் பிரச்சாரத்துக்குப் பயன்படுத்தியாக வேண்டும்.

(141) இலக்கியத் துறையில் பல சிரமங்களுக்கிடையே, "செம்மலரை" நடத்தி வருகிறோம் அதில் எழுதிவரும் நமது நண்பர்களையும், இத்துறையில் ஆர்வம் கொண்டுள்ளவர்களையும் கூட்டி வைத்து அவர்களுடன் மா. செயற்குழு விவாதித்துள்ளது. இத்துறையில் இன்னும் அதிக முன்னேற்றம் காணவேண்டியுள்ளது.

(142) தோழர்களே! ஆரம்பத்தில் நாம் எடுத்துக் கூறியவாறு சர்வதேச நிலை இன்று சோஷியலிஸ்டு சக்திகளுக்குச் சாதகமாக வளர்ந்துள்ளது. கம்யூனிஸத்தைத் தடுத்து நிறுத்துவது என்று 25 ஆண்டுகளாக உறுதியாகக் கடைப்பிடித்து வந்த அமெரிக்கக் கொள்கை வேகமாக நொறுங்கிக்கொண்டிருக்கிறது. வியட்நாமை விட்டு அது வெளியேறும் நாள் வெகு தூரமில்லை என்று கூறலாம்.

சீன மக்கள் குடியரசு இன்று ஐ. நா.வில் தன் இடத்தில் அமர்ந்திருப்பது ஆசியா கண்டத்திலேயே சோஷியலிஸத்துக்கும், முதலாளித்துவத்துக்கும் உள்ள பரஸ்பர பலாபலத்தைக் கணிசமான அளவு சோஷியலிஸத்துக்குச் சாதகமாக மாற்றப் போகிறது.

(143) நமது நாட்டிலும், ஆளும்வர்க்கங்களின் கொள்கைகளின் சூன்யம் நாளுக்குநாள் அம்பலப்பட்டுக் கொண்டிருக்கிறது. இந்நிலையில் சரியான கொள்கை நமது கட்சிக்கே உள்ளதானால் நமது கொள்கையின் வளர்ச்சிக்குத் தான் சாத்தியப்பாடுகள் உண்டு. ஆனால் அது தானாக நடந்துவிடக் கூடியதல்ல. அந்தப் பாதையில் அழைத்துச் செல்லக் கூடிய கட்சி சரியாகச் செயலாற்ற வேண்டும்.

(144) மேற்கூறியவண்ணம் செயலாற்றுவோமாயின் நாம் ஜனநாயக முன்னணியைக் கட்ட முடியும். முன்பிருந்தமாதிரியல்ல. மேலும் பலமான ஜனநாயக முன்னணியைக் கட்டி நம்முடைய கட்சியை தனிமைப்படுத்தும் முயற்சிகளைத் தகர்த்தெறிய முடியும்.

(145) ஜனநாயகக் கட்சிகள் இந்த இந்திரா காங்கிரஸ் பக்கமே போயிருப்பது நீடிக்கக்கூடியதல்ல. நாம் வளர்க்கும் ஒன்றுபட்ட இயக்கத்தின் விளைவாக இந்தக் கட்சிகள் அப்படியே இருக்கும் என்று எதிர்பார்க்க முடியாது. அவைகளில் பிளவுகள் ஏற்படும். ஜனநாயகப் பாதையில் வருவதற்காகத் துடிக்கும் மக்கள் இக் கட்சிகளின் அணிகளில் அதிகரிப்பர். இந்த கண்ணோட்டத்தை எப்பொழுதும் மனதில் வைத்துக்கொண்டு நாம் பணியாற்றுவோமாக!

இந்த சாதாரணமான சூழ்நிலைகளைப் பயன்படுத்தி, இயக்கத்தை வளர்ப்போமாக! எந்தவித அடக்குமுறையையும் எதிர்த்து முன்னேறக் கூடிய ஸ்தாபனத்தைக் கட்டுவோமாக! அதற்கு வேண்டி ஸ்தாபனத்திலுள்ள குறைபாடுகளை சீக்கிரமே களைந்தெறியும் வேலையில் ஈடுபடுவோமாக! நமது கட்சியை தமிழ்நாட்டின் அரசியலில் நிர்ணயமான கட்சியாக வளர்க்கும் பணியில் மேற்கூறிய கடமைகளை நிறைவேற்றுவோமாக!

வாழ்த்துக்கள்,

மாநிலக் குழு